centre for poverty analysis

வறுமை மேலோட்டங்கள்

# இலங்கையில் சிறுவர் வறுமை

மேலோட்டக் கட்டுரைத் தொடர்
வறுமை மேலோட்டம் 11 - 2008

# இலங்கையில் சிறுவர் வறுமை

**கிறிஸ்துவ சிறுவர் நிதியத்திற்காகத் தயாரிக்கப்பட்டது**

**இலங்கை கிறிஸ்துவ நிதியத்திற்காக தயாரிக்கப்பட்டது**

மேலோட்டக் கட்டுரைத் தொடர்

No. 11 - 2008

வறுமை மேலோட்டங்கள் தகவல்களை விரைவாகவும் உரிய காலத்திலும் பரவச் செய்யும் நோக்கத்திலான **CEPA இன் மேலோட்டக் கட்டுரைத் தொடரின்** பகுதிகளாகும்

இம்மேலோட்டக் கட்டுரைத் தொடரானது இரண்டு வகைகளைக் கொண்டுள்ளது.

1) **வறுமை மேலோட்டங்கள்:** இவை துறை சார்ந்த மற்றும் துறை சாரா அரங்கினர்களுக்காக முறைசாரா முறையில் தகவல்களை வழங்குபவனவாக அமைக்கப்பட்டுள்ளன.

2) **கொள்கை மேலோட்டங்கள்:** இவை தெளிவான கொள்கை ஒழுங்கமைப்பைக் கொண்டிருப்பதுடன் வறுமை மற்றும் அபிவிருத்தி விடயங்களில் பணியாற்றும் அரச, அரச சாரா ஆய்வு நிலை மற்றும் நன்கொடை நிறுவனங்களின் கொள்கை வகுப்பாளர்களை இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

ISBN: 978-955-1040-50-5

**பியோனா ரெம்னன்ட் (Fiona Remnant)**
பியோனா வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் வறுமை மதிப்பீடு மற்றும் அறிவு முகாமைத்துவக் குழுவில் சிரேஷ்ட ஆய்வாளராக ஈடுபட்டுள்ளார். இவர் பிரான்சு, இத்தாலிய மற்றும் ஐரோப்பாக் கற்கைகளை ஐக்கிய இராச்சியத்தின் பாத் (டீயவா) பல்கலைக்கழகத்தில் கற்று திரும்பிய பின் சர்வதேசக் கொள்கை ஆய்வுக்கான முதுமானிப் படிப்பிற்காக மீண்டும் அங்கு செல்கிறார். இவர் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் செயன்முறைகள், தொடர்பாடல் மற்றும் ஆய்வுகளைத் திறன்பட பகிர்ந்து கொள்வதிலும் ஆர்வமுள்ளவராவார்.

**அஸ்ரா அப்துல் காதர் (Azra Abdul Cader)**
இவர் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் வறுமை மதிப்பீடு மற்றும் அறிவு முகாமைத்துவக் குழுவின் ஒழுங்கமைப்பாளர். இவர் இந்தியாவின் டெல்லி பல்கலைக்கழகத்தில் சமூகவியல் கற்கைகளைக் கற்றபின் நெதர்லாந்தின் சமூகவியல் கற்கைகளுக்கான நிறுவனத்தில் கிராமிய வாழ்க்கைமுறை எனும் விசேட தேர்ச்சியுடன் அபிவிருத்திக் கற்கைத்துறையில் தனது முதுமானிப் படிப்பைத் தொடர்ந்தார். இவரின் ஆர்வம் கிராமிய வாழ்க்கை மற்றும் அபிவிருத்தி, முரண்பாடுகள் மற்றும் இடம்பெயர்வு, பால், சிறுவர் பிரச்சினைகள், நகர்ப்புற வறுமை என்பவற்றில் மிகுந்துள்ளது.

**ஜென்னா குல் (Jenna Coull)**
ஜென்னா கோல் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு தொண்டர் அங்கத்துவராக வறுமை மற்றும் அறிவு முகாமைத்துவக் குழுவில் தொடர்பாடல், தகவல் பரப்புதல் தொடர்பாக இணைந்து செயற்பட்டார். இவர் தனது பொருளாதாரத்திலான பயிற்சிகளை ஐக்கிய இராச்சியத்தின் புனித அன்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் பெற்றார். பிரித்தானிய அரசுக்கு சூழல், கல்வி தொடர்பான கொள்கைகளில் பொருளாதார திறன்மிக்க வழிகாட்டல்களை வழங்குவதில் பல வருட அனுபவமுள்ளவர்.

## முன்னுரை

இது வறுமை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்களான பியோனா ரெம்னன்ட் மற்றும் அஸ்ரா அப்துல் காதர் ஆகியோரினால் அண்மையில் பிரசுரிக்கப்பட்ட *"இலங்கையில் சிறுவர் வறுமையின் பல்வேறு பரிமாணங்கள்"* எனும் தலைப்பிலான இலக்கிய மீளாய்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு சுருக்கக் கட்டுரையாகும். இவ்வாய்வுக் கட்டுரை இலங்கை கிறிஸ்துவ சிறுவர் நிதியத்திற்காக (CCF) தயாரிக்கப்பட்டதுடன் இல்லாமை, நீக்கம், பலவீனமான தன்மை (DEV) கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது. இக்கட்டமைப்பு உலகலாவிய ரீதியில் CCF இற்காக வர்ட்ஸ்வத் (Wordsworth), மக் பீக் (McPeak) மற்றும் பீனி (Feeny) (2005) என்பவர்களால் முன்கொண்டுவரப்பட்டதாகும்.

இச்சுருக்கமானது இலங்கையில் சிறுவர் வறுமையின் பல்வேறு பரிமாணங்களிலான புரிந்துணர்வுக்குப் பொருத்தமான பல்வேறு அளவுரீதியான, பண்புரீதியான தகவல்களைக் கோவையாகக் கொண்டுள்ள இலக்கிய மீளாய்வின் பிரதான கண்டுபிடிப்புக்களை சுருக்கமாக விளக்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. குறித்த விடயப்பரப்புகளிற்கான மேலதிக விரிவான தகவல்களிற்காக வாசகர்கள் CEPA விலுள்ள மூலப் பிரசுரத்தினைப் பார்க்கவும்.

இவ்வாகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு திருமதி பாத்திமா நஸ்ரியா முனாஸ் இனால் செய்யப்பட்டது.

# பொருளடக்கம்


1. அறிமுகம் ............................................................ 01
2. சுகாதாரம் ............................................................ 02
3. போசணை............................................................ 03
4. கல்வி............................................................ 04
5. ஆயுத முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்............................................. 05
6. சிறுவர்களை வேலையிலமர்த்தல் ............................................................ 06
7. இடம்பெயர்ந்த தாய்மார்களைக் கொண்ட குடும்பங்களின் சிறுவர்கள்........... 07
8. சிறுவர் துஷ்பிரயோகம்............................................................ 08
9. நிறுவனங்களின் ஆதரவும் சிறுவர் நீதித்துறையும்............................................... 09
10. வீதிச்சிறுவர்கள் ............................................................ 10
11. முடிவுரை ............................................................ 11
12. உசாத்துணை............................................................ 12

# 1. அறிமுகம்

சிறுவர் வறுமை என்பது பரந்த நோக்கில் சிறுவர்களின் ஆற்றல், நல்வாழ்வு எதிர்கால வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் பல்வேறு விடயங்களைக் குறிக்கின்றது. சிறுவர், வளர்ந்தோரின் நலனில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு காரணிகளை கடந்த ஐம்பது வருடங்களாக ஆராய்ந்த பின்னர், வறுமையானது சாதாரணமாக வீட்டின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றல் (பிரதானமாக வருமானத்தினடிப்படையில் அளக்கப்படல்) எனும் குறுகிய வரைவிலக்கணத்திலிருந்து பாரிய அளவு முன்னேறி, சூழல், கலாச்சாரம், கல்வி, சுகாதாரம், சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு போன்ற பல்வேறு செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கருத்தில் கொண்ட பல பரிமாணங்களில் நோக்கப்படுகிறது. இப்புரிந்துணர்வானது சிறுவர்களின் நிலையினை அவர்கள் சாதாரணமாக ஒரு குடும்பத்தின் அல்லது வீட்டின் எண்ணிக்கையை மாத்திரம் கூட்டும் அங்கத்தவர்களல்ல என விளங்கிக் கொள்வதற்கும் அவர்கள் அனுபவிக்கும் வறுமையின் இன்னல்கள் வயது வந்தோரை விடவும் வித்தியாசமானவை என விளங்கிக்கொள்ளவும் மிகவும் துணைபுரிகிறது.

இவ்வாய்வு வறுமை பல காரணிகளின் செல்வாக்கினாலான ஒரு விளைவு, இன்னும் வித்தியாசமான பரிமாணங்களில் பலரால் அது அனுபவிக்கப்படுகிறது எனும் அடிப்படை புரிந்துணர்வைப் பயன்படுத்துகிறது. வறுமையின் அளவை அல்லது உண்மையான அனுபவத்தை வருமானம் போன்ற ஒரு தனிச்சுட்டியால் மாத்திரம் அளவிட முடியாது. இதனடிப்படையில் அரசாங்கமும் சர்வதேச பிரதிநிதித்துவ நிறுவனங்களும் வறுமை தொடர்பான பல ஒருங்கிணைந்த சுட்டிகளை ஏற்றுப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன. ஆவற்றுள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித அபிவிருத்திச் சுட்டி (HDI) மிகவும் முக்கியமானதாகும். மனித அபிவிருத்திச் சுட்டியானது அபிவிருத்தியை மூன்று அடிப்படைப் பரிமாணங்களில் அளக்கிறது: பிறப்பின் போதுள்ள ஆயுள்கால எதிர்பார்க்கையால் அளக்கப்படும் நீண்ட ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கான ஆற்றல், வயது வந்தோரின் எழுத்தறிவு வீதம் மற்றும் மூன்றில் இரண்டு பங்கு மதிப்புடன் முதல், துணை, புடைக் கல்விக்கான உள்நுழைவு வீதம் என்பன கூறும் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல், கொள்வனவுச் சக்தி விகித்தில் தலா மொத்தத்தேசிய உற்பத்தியின் மடக்கை வலு (அமெரிக்க டொலர்களில்) இனால் அளக்கப்படும் வாழக்கைத் தரம் என்பனவாகும்.

வறுமையானது பல்வேறு கோணங்களில் தேசிய, சர்வதேச ரீதியில் விரிவாக உணர்ந்து கொள்ளப்பட்டு வருகின்றதாயினும் அது தொடர்பான இன்னும் பரந்த, ஆழமான ஆய்வுகளும் அளவுகோல்களும் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளன. இப்பற்றாக்குறையானது பல பர்மாணங்களையுடைய வறுமை வரைவிலக்கணத்தின் அடிப்படையில் செயற்பாட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள அரச, தனியார் அமைப்புகளுக்கு பெரும்

சவாலாகவே உள்ளது. எந்த ஒரு திட்ட ஆக்கத்திற்கும் எப்பிரதேசங்களில் அல்லது பிரிவுகளில் உள்ள சிறுவர்களின் தேவைகள் முதன்மையான இடத்தில் உள்ளன மற்றும் பல்வேறு பிரதேசங்களில் உள்ள சிறுவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் என்பன பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டம் இன்றியமையாதது. எனவே தற்போதைய சூழலில் இவ்விடயங்களிற்கு அனுபவ அடிப்படையிலான, ஆழமான ஆராய்ச்சிகள் கட்டாயத் தேவையாகும்.

இலங்கையில் சிறுவர் தொடர்பான திட்டங்களில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்கள் சிறுவர்களின் நோக்கு, கருத்துக்கள் என்பவற்றை அவர்களை மையப்படுத்திய வண்ணம் அவரகளின் ஈடுபாட்டுடனான முறைகளினூடு (participatory methodologies) தமது திட்ட விரிவாக்கங்களில் ஈடுபட்டுள்ளன. ஆய்வுகளில் இம்முறைகளைக் கையாள்வதும், ஆய்வுக்கு உட்படுத்திக்கொள்வதும் வரையறைக்குட்பட்டுள்ளது. எனினும் தலையீடுகளைச் சரியாக இலக்குப்படுத்திக்கொள்ள நாட்டிற்குள்ளான பிரதான, முதன்மையான விடயங்கள் பற்றிய ஒரு பரந்த நோக்கு மிகவும் முக்கியமானதாகும்.

இச்சுருக்கமானது வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ‘இலங்கையில் சிறுவர் வறுமையின் பல்வேறு பரிமாணங்கள்’[1] எனும் ஒரு பெரிய பிரசுரிப்பின் சுருக்கமாகும். இது தற்போதுள்ள அளவறி, பண்பறி ஆய்வுகளைப் பயன்படுத்தி இலங்கையில் சிறுவர் நலனில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பிரதான விடயங்களைக் கூட்டாக ஆராயும் நோக்கத்தில் எழுதப்படுகிறது.


**இல்லாமை, நீக்கம் மற்றும் பலவீனமான தன்மை தொடர்பான கட்டமைப்பு**

இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆராய்ச்சிக்குரிய கட்டமைப்பானது சிறுவர் வறுமையை சிறப்பாக கருத்திற் கொண்டு அமைக்கப்பட்டதும் பல பரிமாணங்களில் ஆனதுமாகும். DEV கட்டமைப்பு கிறிஸ்துவ சிறுவர் நிதியத்திற்காக வர்ட்ஸ்வத் (Wordsworth), மக் பீக் (McPeak) மற்றும் பீனி (Feeny) (2005) என்பவர்களால் முன்வைக்கப்பட்டதாகும். இது ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்துகின்ற, இணைந்த இல்லாமை, நீக்கம் மற்றும் பலவீனமான தன்மை எனும் மூன்று பரிமாணங்களின் அடிப்படையிலானதாகும் (படம் 1.1). DEV கட்டமைப்பானது பல நாடுகளில் சிறுவர் தொடர்பான விசேடமான ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் பல பரிமாணங்களில் வறுமையை, சிறப்பாக சிறுவர் வறுமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இது சிறுவர்கள் அனுபவிக்கும் வறுமையை தெளிவாக விளக்கத் முடியாத, குறுகிய, எளிமையான வறுமை தொடர்பான வரைவிலக்கணத்தை விட்டும் முன்னேறி சிந்திக்கத் தூண்டும் ஒரு முயற்சியாகும். பிரச்சினையின் தன்மையைப்

1 REMNANT F., CADER, A., 2008. The Multiple Dimensions of Child Poverty in Sri Lanka, Centre for Poverty Analysis.

பொறுத்து சிறுவர்கள் வெவ்வேறு பரிமாணங்களில் பல்வேறு அளவுகளில் வறுமையை அனுபவிக்கின்றனர். இன்னும் பல சிறுவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பரிமாணங்களில் வறுமையை அனுபவிப்பதால் இக்கட்டமைப்பின் மேற்பொருந்தும் பிரதேசங்களுள் உள்ள நிலைமையும் காணப்படுகிறது.

**படம் 1.1:** DEV **கட்டமைப்பு**




*முதல்:* வர்ட்ஸ்வத் (Wordsworth) குழுவினர் (2005)

**இல்லாமை** இதனை 'அடிப்படைத் தேவையுடனான' பரிமாணம் என வர்ணிக்கலாம். சிறுவர்களின் நல்ல ஒரு வாழ்க்கைக்குத் தேவையான உணவு, சுத்தமான நீர், கல்வி மற்றும் ஆரோக்கியம் போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாமையை இது குறிக்கின்றது. இவ்வில்லாமை என்பது பெரும்பாலும் வயது வந்தோரைவிட சிறுவர்களைக் கடுமையாகத் தாக்குகின்றது. ஏனெனில் சிறுவர்கள் இவற்றின் தாக்கத்திற்கு இலகுவில் உள்ளாகி தமது முழு வாழ்க்கைக் காலத்திலும் பாதிப்பை அனுபவிக்கின்றனர். குறிப்பாக ஆரோக்கியம், போசணை போன்ற பிரச்சினைகளால் சிறுவர்கள் பெரிதும் தாக்கப்படுகின்றனர்.

**நீக்கம்** எனும் பரிமாணமானது குறிப்பிடப்பட்ட வாய்ப்புக்களையோ, ஆக்கப்பொருட்களையோ அதிகம் கருதாது இல்லாமை எனும் பரிமாணத்திற்கு பங்களிக்கும் நிலைமை, சூழ்நிலை ஆகியவற்றை அதிகமாக கருத்திற் கொண்டது. இது அடிப்படைத் தேவைகளை மட்டுமல்லாது சிறுவர்களின் உணர்வு, சமூக ஆதரவு என்பவற்றைக் கருத்தில் கொள்கிறது. நீக்கம் என்பது சிறுவர்கள் வறுமையை வெளிப்படுத்தும் விதம் பற்றிய ஒரு முக்கியமான கருத்தாக இருப்பதுடன் குடும்ப, சமூக உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு பரிமாணமாகும். ஒரு சிறுவன் குறித்த குழுக்களிலிருந்து, தொழிற்பாடுகளிலிருந்து மற்றும் வாய்ப்புகளிலிருந்து விலகி இருக்க, நீக்கப்பட்டதாக உணர பல காரணங்கள் உள்ளன. DEV கட்டமைப்பு பிரதான நான்கு பகுதிகளை இங்கு அடையாளம் கண்டுள்ளது: சமூக அந்தஸ்து

உதாரணமாக தம் பெயரிற்கான இழுக்கு; குழு அங்கத்துவம் உதாரணமாக இனம், மதம்; பொருளாதார நிலைமை உதாரணமாக வழக்கமான குழுக்களிலிருந்து நீக்கப்படல் மற்றும் கலாச்சார பக்கச்சார்பு உதாரணமாக பால் வேறுபாடு என்பனவே அவையாகும்.

**பலவீனமான தன்மை** என்பதானது சிறுவர்கள் தமது வாழிடம், இனம், சமூக நிலைமை, வயது, பால் போன்ற பல்வேறு விடயங்களின் அடிப்படையில் வித்தியாசமான அச்சுறுத்தல்களால் எவ்வாறு தாக்கப்படுகின்றனர் என வறுமையின் இயங்கும் தன்மையை வலியுறுத்துகிறது. வறுமையைத் தாங்குவதற்கான ஒரு சிறுவனின் ஆற்றல், சிறுவர்கள் எவ்வளவு தூரம் வறுமையிலிருந்து மீளக்கூடியவர்களாக உள்ளனர் என்பதையும் குறிக்கிறது. இனிவரும் காலங்களைப் பற்றிய திட்டங்களை முன்னெடுக்க முடியாமல், ஒரு பாதுகாப்பான உறுதியான வாழ்வைத் தொடர முடியாமை என்பது பலவீனமான தன்மையின் அடையாளமாகும். மேலும் அவர்களைச் சூழவுள்ள ஆபத்துக்களுக்கு முகம் கொடுத்து எதிர்த்து நிற்கும் தன்மையானது அவர்களின் சுய ஆற்றல்கள், வளங்களின் இருக்கை மற்றும் அவர்களின் சூழல் என்பவற்றில் தங்கியுள்ளது. வறுமை என்பது ஒரு மாற்றமடையக்கூடிய அனுபவமாகும். இது பருவ காலம், முரண்பாட்டு மட்டங்கள், மற்றும் பெரிய பொருளாதார நிலைமைகள் போன்ற பல சந்தர்ப்ப விடயங்களில் தங்கியுள்ளது. எனவே இப்பலவீனமான தன்மையின் நிலையானது சந்தர்ப்பத்துடன் பெரிதும் மாற்றமடையலாம். ஒரு சில மக்கள் மீளமுடியாத வறுமையுள் சிக்கிக்கொண்டுள்ளனர். வறுமையில் ஆழ்த்துகின்ற மற்றும் வறுமையிலிருந்து மீளவைக்கும் பலவீனத்தன்மைக் காரணிகளை எடுத்துக்காட்டுவதன் மூலம் இவ்விளக்கப்பாட்டை தெளிவாக இப்பரிமாணம் விளக்குகின்றது.

## 2. ஆரோக்கியம்

ஒரு குழந்தையின் அறிவுத்திறனில், உடற் செயற்பாடுகளின் விருத்தியில் பிரதான பங்கு வகிப்பது அக்குழந்தையின் ஆரோக்கியமாகும். குறை ஆரோக்கிய நிலைமை குழந்தையின் ஆற்றல்களை நிறைவு செய்து கொள்வதில் ஒரு பிரதான தடையாக அமையலாம். பெறறோரின் வருமானம், கல்வி மற்றும் ஆரோக்கிய நிலை, முக்கியமாக அடிப்படை வசதிகளிலிருந்து அல்லது சேவைகளிலிருந்து சமூக ரீதியில் அல்லது பொருளாதார ரீதியில் விலக்கப்படல் மற்றும் புவியியல் ரீதியான வாழிடம் ( வாழிடம் தொடர்பாக எதிர்நோக்கும் பலவீனங்கள்) போன்ற இயல்புகள் ஒரு குழந்தையின் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன. ஆரோக்கியமின்மையால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை தனது உயர் மட்ட ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ள முடியாமல் போவதானது அடுத்த சந்ததியையும் ஒத்த குறைபாடுகளிற்கு தள்ளக்கூடிய நிலையை உருவாக்கக்கூடியதாகும்.

இலங்கையின் முதன்மை சுகாதார புள்ளி விபரவியல், அதாவது உயர் நிர்ப்பீடனம் வழங்கல், தாழ் குழந்தை இறப்பு வீதம் என்பன ஏனைய வளர்ந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் சிறுவர் ஆரோக்கிய நிலை பற்றி சார்பளவில் ஒரு சிறந்த தோற்றத்தைக் கொடுக்கின்றது. சுதந்திரம் அடைந்தது முதல் சமூகநலனில் ஏற்படுத்திய வலியுறுத்தலானது இலவச மருத்துவம் மற்றும் குடும்ப சுகாதாரம், போசணை என்பவற்றை உயர்ந்த அளவில் பேணுவதற்கான சேவைகளைத் தருவித்துள்ளது. இருந்தாலும் இவ்வாறான நேர்முக சுட்டிகளுடன் நிறை குறைவு, வளர்ச்சி குறைந்த சிறுவர்கள் போன்ற குறிப்பிடக்கூடிய பிரச்சினைகள் இன்னும் உள்ளன. அத்தோடு எல்லா சிறுவர்களுக்கும் சுத்தமான நீர், போதுமானளவு சுகாதார சூழல் (வாந்திபேதியிற்கான பிரதான காரணம்) போன்றன கிடைப்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

2000ம் ஆண்டில் நடத்தப்பட்ட குடித்தொகை மற்றும் சுகாதார கணிப்பீட்டினால் (DHS), வடகிழக்கு பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஐந்து வயதிற்குக் கீழ்ப்பட்ட சுகாதார அட்டைகளை வைத்திருக்கும், சகல தடுப்பூசிகளும் பெற்றுக்கொண்ட சிறுவர்களின் சதவீதம் கணிப்பிடப்பட்டது (அட்டவணை 2.1 ஐப் பார்க்க).

2001 இல் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சனத்தொகை மற்றும் சுகாதாரக் கணிப்பீடும் இது மாதிரியான முடிவுகளைக் காட்டியது.

**அட்டவணை 2.1: சுகாதார அட்டை உள்ள தடுப்பூசி வழங்கப்பட்ட ஐந்து வயதுக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் (2000)**

| பிரிவு | அட்டையை வைத்துள்ள சிறுவர்கள்% | முழுத் தடுப்பூசி வழங்களையும் பெற்றுக்கொண்ட இச்சிறுவர்கள்% |
|---|---|---|
| கொழும்பு பிரதேசம் | 86.8 | 79.9 |
| ஏனைய நகர்ப்புறங்கள் | 86.5 | 82.2 |
| கிராமப் புறப் பிரதேசம் | 87.4 | 81.5 |
| தோட்டப் புறப் பிரதேசம் | 66.3 | 71.4 |

*குறிப்பு:* வடக்கு கிழக்கு தவிர்ந்தது

*முதல்:* DCS 2002(a): 172

சுகாதாரக்குறைவினாலும் பாதுகாப்பற்ற குடிநீர்ப்பாவனையாலும் உள்ளாகின்ற வயிற்றுப்போக்கானது இன்றும் இலங்கைச் சிறுவர்களில் பொதுவாகக் காணப்படுகின்றதுடன் இளம் சிறார்களின் வளர்ச்சி, விருத்தி குறைவிற்கும் இது

பிரதான காரணங்களுள் ஒன்றாக அமைகின்றது. 2000 இல் குடித்தொகை, சுகாதார ஆய்வின் முடிவுகளின் படி (வடக்கு கிழக்கு தவிர்ந்த) கடந்த இரு வாரங்களாக வாந்திபேதியால் பாதிக்கப்பட்ட ஐந்து வயதுக்கு கீழ்ப்பட்ட சிறார்கள் கொழும்பில் 5.5%, ஏனைய நகர்ப்புறங்களில் 5%, கிராமங்களில் 7%, மற்றும் பெருந்தோட்டங்களில் 6.5% எனக் காணப்பட்டது. மிக அண்மையில் 2004இல் ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (UNICEF) தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்துடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட சில வடக்கு கிழக்கு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 13-23 மாதங்களான குழந்தைகளில் 13% ஆக வாந்திபேதி அதி உயர் வீதத்தில் காணப்பட்டதுடன் 24-35 மாதக்குழந்தைகளில் 5% ஆகவும், 48-59 மாதச்சிறார்களில் 3% ஆகவும் குறைந்திருந்தது. ஒரு தாயின் கல்வி மட்டத்திற்கும் வாந்திபேதி வீதத்திற்குமிடையே எந்தவொரு தெளிவான தொடர்பும் அறியப்படவில்லை.

ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சிசு மரண வீதம், தாய் மரண வீதம் என்பன மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. சிசு மரண வீதம் 1985-1990 இல் 22% இலிருந்து 1995-2000 காலப்பகுதியில் 13.5% ஆகக்குறைந்துள்ளது. சிசு மரண வீதமானது நகர்ப்புறங்களில் 15%, கிராமப்புறங்களில் 17.5% (வடக்கு கிழக்கு தவிர்ந்த) ஆக உள்ளதுடன் இவற்றுடன் ஒப்பிடும் போது தோட்டப்புறங்களில் 47.5% (500 இலும் குறைவான தரவுகளின் அடிப்படையில்) ஆக அதி உயர் அளவில் காணப்படுகின்றது. சிசு மரணத்திற்கான பிரதான மூன்று காரணங்களாவன சுவாசக் கோளாறுகள், வாந்திபேதித் தொற்று மற்றும் விபத்துக்கள் என்பனவாகும் (DCS 2002). மரண வீதத்திற்கான காரணங்கள் தாயின் கர்ப்ப கால ஆரோக்கியம், போசணை மற்றும் குழந்தைப் பிறப்பின் முன்னும் பின்னுமான கவனிப்பு என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளது. பெற்றோரின் சமூக, பொருளாதார பின்னணி மற்றும் தாயின் கல்வி நிலை என்பனவும் குழந்தைகளின், சிறார்களின் இறப்பு வீதத்தில் பெரும் பங்கு வகிக்கின்றதென அறியப்பட்டுள்ளது. வாழும் சூழல், முதல் மட்ட சுகாதாரக் கவனிப்பு வசதிகளுக்கான இயலுமை என்பனவும் மரண வீதத்தில் பாதிப்புச் செலுத்தும் பிரதான காரணிகளாகும். தாயின் வயதும் ஒரு முக்கிய காரணியே: 20 வயதுக்குக் குறைந்த அல்லது 35 வயதுக்கு மேற்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் பிறந்து முதல் மாதத்தில் இறப்பதற்கான உயர் அச்சுறுத்தலைக் கொண்டுள்ளன (DCS 2000).

வடக்கு, கிழக்கு உட்பட்ட சகல பிரதேசங்களிலும் பெரும்பாலும் 100% ஆன பெண்கள் ஏதாவது ஒரு வகையில் குழந்தைப் பிறப்பின் முன்னான கவனிப்புக்களைப் பெற்றுக்கொள்வதால் இவ்வாதரவு கூடிய அளவிலேயே உள்ளது. நாடு முழுவதிலும் தாய்மார்களின் பாடசாலைக் கல்வி மட்டம் ஒரு பிரதான காரணியாக கொள்ளப்படுவதுடன் பயிற்றப்பட்ட உதவிகளினுடனான பாடசாலைக் கல்வி வீதம் 72% இலிருந்து 98% இற்கு உயர்ந்துள்ளது (DCS / UNICEF 2004).

**அட்டவணை 2.2: மரண வீதத்தின் போக்  (1000 உயிருடனான பிறப்புக்களில்)**

| காலம் | பிறப்பின முன்னான இறப்பு | பிறந்தவுடன் இறப்பு | மூந்தை இறப்பு | சிறுவர இறப்பு | ஐந்து வயதிற் க் கீழ இறப்பு |
|---|---|---|---|---|---|
| 1995-2000 | 8.3 | 5.3 | 13.6 | 1.0 | 14.6 |
| 1990-1995 | 19.4 | 5.2 | 24.6 | 2.6 | 27.2 |
| 1985-1990 | 13.8 | 8.2 | 22.0 | 3.3 | 25.3 |

*குறிப்பு:* வடக்கு கிழக்கு தவிர்ந்தது

*முதல்:* DCS 2002(a)

**அட்டவணை 2.3: பிரிவுகளில் மரண வீதம் 2002 (1000 உயிருடனான பிறப்புக்களில்)**

| பிரிவு | பிறப்பின முன்னான இறப்பு | பிறந்தவுடன் இறப்பு | மூந்தை இறப்பு | சிறுவர் இறப்பு | ஐந்து வயதிற் க் கீழ இறப்பு |
|---|---|---|---|---|---|
| நகரம் | 9.1 | 5.8 | 14.9 | 2.5 | 17.3 |
| கிராமம் | 13.5 | 3.9 | 17.4 | 1.1 | 18.6 |
| **பெருந்தோட்டம்** | (31.0) | (16.5) | (47.5) | (4.1) | (51.6) |

*குறிப்பு:* வடக்கு கிழக்கு தவிர்ந்தது (அடைப்பினுள் உள்ளவை 500 இலும் குறைந்த சந்தர்ப்பங்களின் அடிப்படையிலானவை)

*முதல்:* DCS 2002(a)

2001 இல் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கடந்த குடித்தொகை மற்றும் வீடமைப்புக் கணக்கெடுப்பு இலங்கைச் சிறார்களிடையே காணப்படுகின்ற பல வகையான அங்கவீனம் தொடர்பான தகவல்களைச் சேகரித்தது. அங்கவீனமான சிறார்களின் எண்ணிக்கை வயதுடன் அதிகரிக்கிறதானது அங்கவீனமானது வாழ்க்கைக் காலத்தின் பிற்பகுதியில் அல்லது ஏதாவது ஒரு நோய் அல்லது காயம் காரணமாக ஏற்படுகிறது எனச் சுட்டிக்காட்டுகிறது. மொத்தமாக கணக்கெடுப்பின்படி 158,446 அங்கவீனமான ஆண்பிள்ளைகளும் 116,265 பெண் பிள்ளைகளும் உள்ளனர். இருபாலாரிலும் 33% ஆனோர் கால் அங்கவீனமுற்றவர்களாக பொதுவாக கூடிய அளவில் இருந்ததுடன் கேட்டல் / பேச்சு குறைபாடுகளுடன் 26.5 % உம் மனநலக்குறைவுடன் 25 % ஆனோரும் காணப்பட்டனர் (DCS 2001). அங்கவீனர்கள் பெரும்பாலும் வறியவர்களாகவும் வறுமையின் எல்லையில் உள்ளோராகவும் இருப்பதுடன் அங்கவீனமானவர்களும் அவர்களின் குடும்பங்களும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெரும்பகுதியான குடித்தனங்களை உள்ளடக்குகின்றன என கணிப்பீடுகள் காட்டுகின்றன.

அங்கவீனமுற்ற சிறுவர்களுக்கு அவர்களது பிற்கால வாழ்வில் சுதந்திரமான, முன்னேற்றமான நல்வாழ்வுக்கு சிறந்த வாய்ப்பளிக்கும் ஒரு காரணியாக கல்வி இணங்காணப்பட்டுள்ளது. 1970 களிலிருந்து அங்கவீனர்களுக்கும் சிறந்த கல்வியை வழங்குவதற்காக அவர்களும் கல்வித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். என்றாலும் கல்வியிலிருந்து விலகிக் கொள்ளும் வீதம் அங்கவீனமானவர்களிடையே உயர்வாக உள்ளது; இவர்களில் 56% ஆனோர் துணைநிலைப் பாடசாலைகளுக்கு போவதுடன் 4.5% ஆனவர்களே உயர் கல்வியைத் தொடர்கின்றனர். கல்வித் துறையைக் கருதும் போது வலது குறைந்த ஆண் பிள்ளைகளிலும் வலது குறைந்த பெண் பிள்ளைகளே அதிகப் பிரதிகூலங்களை அனுபவிக்கின்றனர. பாடசாலைக்குச் செல்லும் வலது குறைந்த சிறுவர்களில் 59.5% ஆனோர் ஆண் பிள்ளைகளாகவும் 40.5% ஆனோர் பெண் பிள்ளைகளாகவும் உள்ளனர் (சமூக சேவைகள் அமைச்சு 2003:19). குடும்பங்கள் தமது பெண் பிள்ளைகளின் அங்கவீனத்தை வெளிக்காட்ட விரும்பாமையே இதற்கான காரணமாகலாம் என இவ்வமைச்சு கருத்துரைக்கிறது.

பெரும்பாலான வளர்ந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும்போது சுகாதார சேவை மற்றும் ஆரோக்கியம் எனும் துறைகள் ஓரளவு சிறந்து காணப்படுகின்றது. பெரும்பாலான பகுதிகளில் மருத்துவ வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பன ஒப்பீட்டளவில் சிறப்பாக இருப்பதுடன் சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்களும் அதிகரித்து வருகிறது. தரவுகள் வேறுபாடான தன்மைகளைக் காட்டுவதால் நாட்டில் சிறுவர்களின் சுகாதாரம் தொடர்பாக பொதுவாகக் கருத்துரைப்பது கடினமாக உள்ளது. எனினும் ஆரோக்கியமின்மையில் செல்வாக்குச் செலுத்தும் பெரும் காரணியொன்றாக இல்லாமை உள்ளது தெளிவாக விளங்குகிறது. போதியளவு வாழ்க்கைத் தரத்திலில்லாத, கல்வி கிடைக்கப்பெறாத, முக்கியமான உட்கட்டமைப்புக்கள், சந்தை வாய்ப்புக்கள் இல்லாத வீடுகளே ஆரோக்கியமின்மையால் கூடுதலாகப் பாதிக்கப்படக்கூடியதாயுள்ளன.

### 3. போசணை (ஊட்டம்)

இலங்கையில் சிறுவர் போசணைக் குறைபாடானது ஒரு பெரிய பிரச்சினையாகத் தொடர்ந்தும் இருந்து வருகிறது. இறுதியாக நடைபெற்ற குடித்தொகை மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்பின்படி (2000) ஐந்து வயதிற்குக் கீழ்ப்பட்ட 1/3 மற்றும் 1/4 இடைப்பட்ட அளவினர் குறை நிறையுடனும் 1/10 பகுதியினர் நீண்ட கால அல்லது தீவிரமான குறையூட்டத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். போசணைக் குறைபாட்டு வீதமானது ஏனைய தென்னாசிய நாடுகளிலும் குறைவு எனினும் ஆசியா அல்லாத நாடுகளை விட உயர்வாகவே உள்ளது. ஆனால் இலங்கையைப் போன்ற வருமான மட்டத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது போசணைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டு குறை நிறையுடன் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை இலங்கையில் மிகவும் உயர்வாகவே உள்ளது. சிறந்த சிசு மரண வீதமுள்ள நாடுகளில்

எதிர்பார்க்கப்படும் போசணைக் குறைபாட்டு வீதத்திலும் மூன்று மடங்காக உள்ளது. ஏறத்தாழ 72,000 குழந்தைகள் (19% ஆன உயிருடனான பிறப்புக்களில்) ஒவ்வொரு வருடமும் ஓரளவு முதல் கடுமையான குறையூட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்; ஒரு இலங்கைக் குழந்தையின் சராசரி பிறப்பு நிறை ஏறத்தாழ 2.8 kg ஆகும். இது குறிப்பு இடைப்பெறுமானமான 3.2 kg இலும் மிகவும் தாழ்வானதாகும் (மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம 1998) (டி. சில்வா 2000).

**அட்டவணை 3.1: வயது மற்றும் பால் அடிப்படையில் சிறுவர் றையூட்ட வீதம், 2000 (%)**

| வயது | ஓரளவு அல்லது கடுமையான போசணைக் றைபாடு | | | | கடுமையான போசணைக் றைபாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாதங்- | வயதுடனான நிறை | | வயதுடனான உயரம் | | வயதுடனான நிறை | | வயதுடனான உயரம் | |
| களில | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 3-5 | 0.90 | 0.00 | 6.12 | 1.83 | 0.90 | 0.00 | 3.23 | 1.83 |
| 6-11 | 23.50 | 14.54 | 6.17 | 5.02 | 1.71 | 4.30 | 1.64 | 1.76 |
| 12-23 | 30.57 | 26.87 | 11.74 | 21.53 | 5.04 | 4.27 | 2.89 | 3.76 |
| 24-35 | 31.95 | 36.26 | 10.54 | 14.47 | 4.5 | 7.09 | 1.74 | 4.41 |
| 36-47 | 26.69 | 65.23 | 12.02 | 14.76 | 1.72 | 7.59 | 1.03 | 2.84 |
| 48-59 | 38.20 | 37.47 | 18.95 | 19.28 | 3.99 | 6.93 | 4.43 | 3.49 |
| All | 29.04 | 29.81 | 11.90 | 15.34 | 3.37 | 5.80 | 2.41 | 3.35 |

*முதல்:* DHS (2000) தரவுகளின் குணவர்தன கணக்கெடுப்பு. 2003: பக்கமிடப்படாதது

இலங்கை போசணை விடயத்தில் கூடிய முன்னேற்றம் அடைந்து வருகின்ற பொதிலும் எல்லா சனத்தொகைக் கூட்டத்திலும் தாய்மார்களின் போசணைக் குறைவு, நிறை குறைந்த பிறப்பு, ஐந்து வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களின் போசணைக் குறைவு மற்றும் நுண் போசணை மூலகக் குறைபாடு என்பனவற்றால் இன்றும் பாதிக்கப்பட்டே வருகின்றது. இவற்றிற்கு மேலதிகமாக சில பிரதேசங்களில் வீடுகளில் உணவுக்கான பாதுகாப்பின்மையும் போதியளவு முறையான போசணை பற்றிய அறிவின்மையும் நிலவி வருகிறது. அதே போல் இலங்கை வாழ் மக்களின் உணவு மற்றும் வாழ்க்கை முறைகள் மாற்றமடைய மிகை போசணையாலான ஆபத்துக்களும் மிகைபருமனால் ஏற்படுகின்ற நீண்டகால நோய்களும் வளர்ந்து வருகின்றன.

## 4. கல்வி

நாட்டின் அபிவிருத்தியில் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள, இலங்கை அதன் உயர்திறனைக் காட்டியுள்ள ஒரு துறை கல்வித்துறையாகும். கடந்த 50 வருடங்களாக இலவசக் கல்வி மற்றும் கல்வியின் நன்மைகள், மதிப்பு என்பவற்றுக்காக நாட்டின் அர்ப்பணிப்பு என்பன, இலங்கையின் உயர் எழுத்தறிவு வீதத்திற்கும் கல்வித் துறைக்கு உட்படுபவர்களின் அதிகமான எண்ணிக்கைக்கும் வித்திட்டுள்ளன. கல்விக்காக செலவழிக்கும் ஆற்றல் குடும்பங்களிடையே வேறுபட்ட அளவுகளிலேயே உள்ளது. இவவேறுபாடுகளைக் களையும் நோக்குடன் 1945இல் பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. வயது வந்தோரின் எழுத்தறிவு வீதம் 92% ஆகவும் முதல் நிலை, துணை நிலை, புடை நிலைக் கல்விகளுக்கான கட்டாய ஆட்சேர்க்கை வீதம் 65% ஆகவும் முதலாம் தரத்திற்கான ஆட்சேர்க்கையின் தேறிய வீதம் 97% ஆகவும் இலங்கையில் பதியப்பட்டுள்ளது (உலக வங்கி 2005: 2). எனினும் இவ்வாறாக மனித அபிவிருத்திச் சுட்டியை அதிகரித்து இலங்கையை ஒரு சிறந்த கல்வித் துறையைக் கொண்ட நாடாக உயர்த்திக் காட்டக் கூடிய முதன்மையான தரவுகள் காணப்பட்ட போதிலும் நாட்டில் இன்றைய திகதிக்கு கணக்கெடுக்கப்படாத பல அடிப்படையான பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பிடத்தக்க விகிதத்திலான சிறுவர்கள் ஒழுங்கான, முழுமையான கல்வியின் சுவையை உணர முடியாதவர்களாக காணப்படுவதாகவும் சான்றுகளுள்ளன.

அதிகளவிலான ஆரம்ப ஆட்சேர்க்கை வீதத்தைக் கொண்டிருந்தாலும் சுமார் 18% ஆன சிறுவர்கள் தரம் 9 இனைக் கூட பூர்த்தி செய்யாமை அதிகளவு விலகிச் செல்லும் மட்டத்தைக் காட்டுகிறது (உலக வங்கி 2005: 2). ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் 2001 இன் கணக்கெடுப்பின் படி 80,000 – 100,000 இடைப்பட்ட 5-14 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கிறார்களில்லை. பாடசாலைக் கல்வியை முழுமையாக பூர்த்தி செய்யத் தவறும் சிறுவர்கள் பெரும்பாலும் கிராமப்புறங்களிலிருந்தான, முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்தான, எல்லைக் கிராமங்கள் மற்றும் தோட்டப்புறப் பிரதேசங்கள் உட்பட நாட்டின் எல்லைப்படுத்தப்பட்ட மற்றும் வறிய குடும்பங்களிலுள்ளவர்களாவர். இலவசக் கல்வி வழங்கப்பட்ட போதிலும் குடும்பங்களின் பாடசாலைக்குத் தேவையான புத்தகம், உணவு மற்றும் பேருந்துக் கட்டணம் போன்ற ஏனைய முக்கியமானவற்றிற்கு செலவழிக்கக்கூடிய வசதி இல்லாமலிருக்கின்றனர். இவற்றிற்கு மேலதிகமாக அங்கவீனத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் தாய்மார் தொழில் நாடி வெளிநாடு செல்ல தந்தைமாரால் வீட்டு வருமானத்தை சரியாக முகாமைத்துவம் செய்ய முடியாமையால் வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் சிறுவர்களும் பலவீனமானவர்களாக உள்ளடக்கப்படுகின்றனர். கடுமையாக பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு கொண்ட, திறன்மிக்க ஆசிரியர் பற்றாக்குறையுள்ள

மற்றும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வி மற்றும் கற்றல் மட்டம் மிகவும் தாழ்வாகவே உள்ளது. 2003 இலான ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் உலக வங்கி, முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கல்வி, உட்கட்டமைப்பைச் சீரமைப்பதற்கு ஏறத்தாழ 140 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகக் கணிப்பிட்டுள்ளது. சுனாமி மற்றும் முரண்பாட்டுக்குரிய பிரதேசங்களில் அண்மைக்கால குழப்ப நிலைகள் காரணமாக மதிப்பீடுகள், விருத்திகளை மேற்கொள்ளத் தடைகளுள்ளதால் இக்கணிப்பீட்டுத் தரவானது இன்றைய திகதிக்குப் பொருந்துகிறது எனக் கூற முடியாதுள்ளது.

பாடசாலைக்கு சமுகமளிப்பவர்களினதும் கல்வியின் தரம் தொடர்பான பிரச்சினைகளும் உள்ளன. 90% ஆன சிறுவர்கள் முதலாம் தரப் பாடசாலைக் கல்வியை முடித்தாலும் 20% இலும் குறைவானவர்களே கணிதம், எழுத்தறிவு மற்றும் வாழ்க்கைத்திறன் எனபவற்றில் சிறந்த தேர்ச்சி அடைகின்றனர் (NEC 1995: 52). பயிற்றப்பட்ட ஆசிரியர்களை வேலைக்கமர்த்துவதில் அரசாங்கம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் காரணமாக பெரும்பாலான கிராமப்புறங்களில் கற்பித்தலின் தரம் குறைவாகும். பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாணவர்கள் எனும் விகிதம் உயர்வாகவே உள்ளது. 2005 பாடசாலைக் கணிப்பீடுகளின் படி உயர் விகிதமாக 142 மாணவர்களுக்கு ஒரு பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் என திருகோணமலை மாவட்டத்திலும் 132 மாணவர்களுக்கு ஒரு பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் என நுவரெலியா மாவட்டத்திலும் பதியப்பட்டுள்ளது (கல்வியமைச்சு 2007).

21ம் நூற்றாண்டின் தொழிற்சந்தைக்குத் தேவையான திறன்களை இளம் சமுதாயத்தில் பிரதிபலிக்கக் கூடியவாறு கல்வித்திட்டம் இன்னமும் திருத்தப்படாமையால் இளம் மாணவர்கள் தொழில் வாய்ப்புக்களுக்குத் தேவையான குறைந்த திறன்களுடனேயே பாடசாலையிலிருந்தும் விலகுகின்றனர். தொழிற்பயிற்சிகளை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், பெரும்பாலான இளம் பிராயத்தவர்கள் செலவு கூடிய தனியார் துறையின் பயிற்சிகளையே எதிர்நோக்க வேண்டியுள்ளனர். புடைநிலை/உயர் கல்விக்கான வசதிகள் குறைவாக இருப்பதால் கல்வியைத் தொடர விரும்பினாலும் மாணவர்களின் உயர் கல்விக்கான ஆட்சேர்க்கை வீதம் குறைவாகவே உள்ளது.

கல்வியானது எப்போதும் வறுமையை ஒழித்து ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க ஒரு அனுமதிச் சீட்டாகும். இவ்வாறான ஒரு சொத்தின் குறைபாடானது கடுமையான ஒரு இல்லாமை நிலைமையே. பல புள்ளிவிபரங்களின்படி கல்வியறிவுடைய பெற்றோர்களின் பிள்ளைகள் சுகாதாரம், போசணை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பிரச்சினைகளுக்கு குறைவாகவே ஆளாகின்றனர் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. எனவே வரும் சமுதாயத்திற்கு சிறந்த கல்வியை அளிப்பதானது சமூக பொருளாதார சுட்டிகளில் பல வகையான நல்ல மாற்றங்களை உண்டாக்க உதவும். கல்வியிலான முதலீடானது உயர் வருமானம் ஈட்டல், சிறந்த முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள்,

சமூக நல அதிகரிப்பு, கூடிய பெண்கள் வேலை வாய்ப்புக்கள் மற்றும் முக்கியமாக சிறந்த குடும்ப ஆரோக்கியம், சிறுவர் போசணை மட்டம் உள்ளடங்களாக பல பொருளாதார, சமூக நலன்களிற்கு துணை புரியும். கல்வியின் பால் சமூகத்தின் மீளல் வீதமானது இலங்கையில் உயர்வாகும். இது விசேடமாக கட்டாயப்படுத்தப்பட்டுள்ள அடிப்படைக்கல்வி மற்றும் சிரேஷ்ட துணைத்தரக் கல்வி வட்டங்களில் அவதானிக்கப்படுகிறது. ஆண்கள் சிரேஷ்ட துணைத்தரப் பாடசாலை மட்டத்தில் 20% கல்வியின் பாலான சமூக மீளலையும் 15% கட்டாய அடிப்படைக் கல்வி மட்டத்திலுள்ள மீளலையும் காட்டுகின்றனர். பெண்களில் அடிப்படை மட்ட கல்வியின் பாலான சமூக மீளல் 20% உம் சிரேஷ்ட துணைத்தரப் பாடசாலை மட்டத்தில் 18% உம் ஆகும் (உலக வங்கி 2005: 3). இது முதலான, துணையான கல்வியில் கூடிய முதலீடு செய்வதற்கான ஒரு பலமான ஊக்கச் சான்றாகும்.

## 5. ஆயுத முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்

இலங்கையின் யுத்தத்தினால் சிறுவர்கள் மீதான பாதிப்பு பெருமளவு ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வுகளிலிருந்து சிறுவர்கள் அவர்களிற்குத் துணையாக நின்ற வலையமைப்புக்களை இழந்தும், அவர்களது குடும்ப சூழல்களுக்கான அச்சுறுத்தல்களாலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த இரு தசாப்தங்களாகத் தொடர்ந்து வரும் யுத்தமானது பாதுகாப்பின்மை, கொடூரம், உடல், உள உளைச்சல் மற்றும் பொருட்பற்றாக்குறைகள் நிரம்பிய முரண்பாட்டு நிலைமைகளை அனுபவித்துக்கொண்டே இன்றைய சிறுவர்கள் வளர்ந்து வருவதைக் காட்டுகிறது. இது விட்டு விட்டு வரும் ஒரு அனுபவமன்றி தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கும் ஒரு செயற்பாடாக உள்ளது. கீழ்வரும் கூற்றானது சிறுவர்கள் முகம் கொடுக்கும் யுத்தத்தின் பாதிப்புகளுக்கும் அவர்களின் உதவி செய்யப்படமுடியாத நிலைமைக்கும் சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகும். இது வறுமையில் சிக்கிக்கொண்டுள்ள பல சிறுவர்கள் இச்சூழ்நிலையிலிருந்து தப்ப முடியாது இருப்பதை வெளிச்சமிட்டுக்காட்டுவதுடன் இவர்கள் வாழ்வதற்கான வசதிகளைக் கட்டியெழுப்புவதற்கான தேவையையும் மக்களுக்கு உணர்த்திக் காட்டுகிறது.

அமரகோன் (2002) சிறுவர்கள் பயம், கவலை, விரக்தி மற்றும் பாதுகாப்பின்மையுடன் வாழ்ந்து தமது சிறு பிராய வாழ்வைத் தொலைத்து விட்டதாகச் சுட்டிக்காட்டுகிறார்.

> ‘‘யுத்தம் எம்மை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கிறது. நாம் என்ன செய்தாலும் அது எம்முடனேயே இருக்கிறது. அதிலிருந்தும் தப்ப முடியாதவர்களாய் உள்ளோம். நீரினுள் உள்ள இறப்பர் பந்தைப் போல், அது மறுபடியும் மறுபடியும் மேற்பரப்பிற்கே வருகிறது.’’ மஹேஷ், வயது 16, கொழும்பு (அமரகோன் 2002)

இவ்வாறான என்ன, ஏது செய்வதென அறியாத உணர்வுகள் ஒரு சிறுவனின் வாழ்வில் நன்கு அறிந்தவையாகவும் யுத்த சூழலே அவனுக்கு நன்கு பழக்கமான காட்சிகளாகவும் உருவாக்கப்படுகின்றன. முரண்பாட்டு நிலைமைகளானவை ஒரு சிறுவனுக்கு ஒத்தாசையான அமைப்புக்களை அதாவது குடும்பம், சமூகம் போன்றவற்றை அழிப்பதுடன் அவன் உறுதியான நிலைமையை நோக்கும் விதத்தையும் மாற்றுகிறது. சிறுவர்கள் அவர்களின் குடும்பங்களிலிருந்தோ அல்லது சமூகத்திலிருந்தோ அல்லது தலைமையான குழுக்களிலிருந்தோ தனிப்பட்டு இருக்க முடியாது. ஆனால் முரண்பாடுகளானவை இவ்வாறான பௌதீக மற்றும் உணர்வு பூர்வமான பாதுகாப்பு சூழல்களை அழிக்கக்கூடியதாகச் செயற்படுகிறது.

> ‘அவர்கள் எல்லோரையும் சுடுகின்றனர்……… எல்லாமே இரத்த மயம். நாம் குழந்தையும் இறந்து விட்டதென்றே நினைத்தோம். நாம் எமது தந்தை வீடு வரும்வரை பார்த்திருந்தோம். அவர் அந்தக் குழந்தை உயிருடனிருப்பதைக் கண்டார். எனது தாய் ஒரு வாகனத்தில் ஏற்றப்பட்டார். இப்போது நாம் எமது மாமியுடன் வசிக்கிறோம். எமது தந்தை வேறு எங்கோ வசிக்கிறார். முதலில் நான் அவரின்றி வருந்தினேன். ஆனால் இப்போது எனக்கு அவரைக் காண எந்த ஆசையுமில்லை. அவர் எப்போதும் குடிப்பவராக இருந்ததால் எமக்கு எப்போதும் எதுவும் செய்யவில்லை.’ வயது 7 மற்றும் 9 சிறுவர்கள் (ZOA திகதியிடப்படாதது).

சிறுவர்களுக்கு ஒரு கவுரவமான, உரிமையான உணர்வைப் பெறுவதற்கு நெருங்கிய நம்பிக்கையான இணைப்புக்கள் தேவை. இதிலிருந்து வரும் உணர்வுபூர்வமான பாதுகாப்பு, முரண்பாட்டு சூழ்நிலைகள் ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்கள் மற்றும் உளைச்சல்களிலிருந்து விடுபட துணை நிற்கின்றது (UNICEF 1990). கொடூரமும் பாதுகாப்பின்மையும் உள்ள ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு பாதிக்கப்பட்ட குழுவாக, சிறுவர்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. சிறுவர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படலானது இரண்டாவதாக, முக்கியத்துவம் குறைந்ததாக மாறுகின்றது. எதிரியைத் தோற்கடிக்கும் தேவையிலும் ஒரு குழந்தையின் ஆரோக்கியமான விருத்திக்கு குறைந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

வயது குறைந்தோர் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டதன் விளைவாக பாதிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சிறுவர்களைக் கருதும்போது இலங்கையில் சிறுவர்கள் படை வீரர்களாக உள்ளமை ஒரு பெரும் பிரச்சினையாகும். சிறுவன் படை வீரன் என்பது ஓர் ஆயதமேந்திய போர் இருந்தாலோ அல்லது இல்லாதபோதோ ஆயதமேந்திய குழுவுடன் அல்லது படையுடன் இணைக்கப்பட்ட அல்லது ஒரு அங்கத்தவராக இருக்கின்ற 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட எந்த ஒரு ஆளையும் குறிக்கும் (முனசிங்கே 2002: 16). 1980 இல் இந்தியாவின் பாண்டிச்சேரி நகரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ‘புலிக்குட்டிகள்’ என அழைக்கப்பட்ட 18 வயதுக்குக் குறைந்த

சிறுவர்களுக்கான ஒரு பாசறை இருந்து வருவது அறியப்பட்டதிலிருந்து முதன் முதலாக சிறுவர்கள் படையில் சேர்த்துக்கொள்ளப்படல் பதியப்பட்டது.

வறியவர்களின் நிலைமை இங்கு மிகவும் வெளிச்சமாக உள்ளது. இவ்வாறான ஆட்சேர்ப்புக்களில் ஈடுபடுவதற்கு கூடுதலாக ஆளாகக்கூடியவர்களாக உள்ளதால் வறியவர்கள் மீதான இதன் பாதிப்பு தெள்ளத் தெளிவாகும். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழான பிரதேசங்களில் சிறுவர்கள் குறிப்பாக இளம் பிராயத்தினர் இவ்வாயுதமேந்திய குழுக்களில் சேர்வதற்கு 'தூண்டும் காரணிகளை' விளங்கி உணர்ந்து அவற்றை முன்வைப்பதோடு அவர்களின் வாழ்க்கை நிலைகளை முன்னேற்றுவதற்கான வேறு வாய்ப்புக்களை வழங்க முன்வர வேண்டும். சமுதாய மட்டத்தில், முரண்பாட்டு நிலைமை நிலவும் இச்சந்தர்ப்பத்தில் சிறுவர்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றிய அறிவினைக் கட்டியெழுப்புவதற்கு பெரும் ஆவல் உள்ளது.

முழுச்சந்ததியும் யுத்தத்தினதும் கொடூரத்தினதும் மத்தியில் வளர்க்கப்பட்டுள்ள நிலைமையில் நாட்டின் ஒவ்வொரு பகுதியும் மற்றும் ஒவ்வொரு மாவட்டமும் தனிப்பட்ட இயக்கத்தைக் காட்டுகின்றது. யுத்தத்தின் தன்மையானது கூடிக்குறைவதால் இய்யுத்தமானது நிலையானதல்ல ஆதலால் பிரதேசங்களின் புவியியல் அமைப்பும் மாறுபடலாம் (சிறுவரகளைப் பாதுகாப்போம் அமைப்பு - Save the Children 1998). இது தற்போதைய சூழ்நிலையில் சிறுவர் மீதான முரண்பாட்டின் விளைவுகளை புரிந்துகொள்ள முயற்சிக்கும் போது வலியுறுத்தப்பட வேண்டிய முக்கிய காரணியை வழங்குகிறது.

சிறுவர்கள் இம்முரண்பாடுகளையும் இவற்றின் விளைவான கொடுமைகளையும் அனுபவிக்கும் விதத்தை ஆராயும் போது மதீவ்யூ (2006), சிறுவர்கள் ஓர் ஏகவினமான கூட்டமாகவும் அவர்களின் எந்தவொரு அவசர சந்தர்ப்பத்திலுமான பலவீனங்கள் வயது, நகர/கிராம வாழ்க்கைக்குரியவர்களா என்ற வேறுபாடு, இனம் அல்லது குலம் மற்றும் ஆண் பெண் வேறுபாடு என்பது போன்ற பல காரணிகளில் தங்கியுள்ளதாக கூறுகிறார். அதே போல் அவர்களின் பலவீனமான தன்மையானது சமுதாயத்தில் அவர்களின் நிலை, யுத்தத்தின் பின்னான நிலை என்பதிலும் தங்கியுள்ளது. மேலும் யுத்த அனுபவமானது சிறுவர்களின் எல்லா வாழ்க்கைக் கட்டத்திலும்; சிறுபிராயம், இளம்பிராயம் மற்றும் வயது வந்த பின்னும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியது. இவ்வாறு மேலோட்டமாக தீர்வுரைப்பது வினைத்திறனானதல்ல எனினும் யுத்தமானது சிறுவர்களின் வாழ்க்கையைக் கடுமையாகப் பாதிக்கிறது என்பதை விளங்கிக்கொள்ளுதல் மிகவும் முக்கியமாகும்.

## 6. சிறுவர் தொழிலாளர்கள்

சிறுவர் தொழிலாளர்கள் பல விதங்களில் துன்பங்களை அனுபவிக்கின்றனர்: அவர்கள் கூடுதலான வேலைப்பளுவை சுமக்கின்றனர், சிறியதொரு ஓய்வு கொடுக்கப்படுகின்றனர், கல்வியறிவு மறுக்கப்படுகின்றனர், மோசமான வேலை செய்யும் நிலைமைகளை அனுபவிக்கின்றனர், தொழில் வழங்குநர்களால் கடுமையாக நடத்தப்படுகின்றனர், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர் மற்றும் குறைவான கூலியைப் பெறுகின்றனர். இச்சிறுவர்களுக்கு சரியான உடல், உள விருத்திக்கு வேண்டிய ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதுமில்லை, குறிப்பாக முழு நேர வேலையில் ஈடுபட்டுள்ளோரின் ஆரோக்கியம் மற்றும் குழந்தையின் தனி மனித விருத்தியானது பெரிதும் பாதிக்கப்படுகிறது (ராஜேந்திரன் 2004).

வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறுவர்கள் பற்றிய மிகவும் சரியான இன்றைய நிலைக்குரிய புள்ளிவிபரவியல் தரவுகள் மட்டுப்படுத்தப்பட்டளவு / குறைந்தளவு இவ்விலக்கிய மீளாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள பல ஆராய்ச்சிகளும் குறித்த சில பிரதேசங்களையே மையப்படுத்தி உள்ளதால் பெறப்பட்டுள்ள தரவுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பிரதிநிதித்துவம் செய்கின்றன. 1999 இல் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரேயொரு தேசிய மட்டத்திலான ஆராய்ச்சி சிறுவர் தொழில் தொடர்பான தகவல்களைத் தருவதற்கு முயற்சித்துள்ளது. ஆய்விலிருந்து 21% ஆன 5-17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்கள் ஏதாவதொரு பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. 5-14 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களில் 2.9% உம் 15-17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களில் 29.3% உம் கல்விச்செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. மேலும் 18 வயதிற்குக் கீழ்ப்பட்டோரில் 5.3% ஆனோர் பொருளாதார நடவடிக்கைகளிலும் 7.1% ஆனோர் வீட்டு வேலைகளிலும் உள்ளனர்; இவர்களில் எவரும் பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை.

சிறுவர் செயற்பாட்டு ஆய்வானது 5-14 வயதிற்கிடைப்பட்ட 25,333 சிறுவர்கள் கல்வி நடவடிக்கைகளில் அல்லாது பொருளாதார செயற்பாடுகளில் இணைந்துள்ளதாக மேலும் சுட்டிக் காட்டுகிறது (IPEC 2001-2002:78). 2004 இல் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO/IPEC) இனால் சிறுவர் தொழிலில் அதிகமாக ஈடுபட்டுள்ள தன்மை பல பிரதேசங்களினூடாக ஆராயப்பட்ட போது தோட்டப்பிரதேசங்களிலேயே அதிகூடுதலாக இப்பிரச்சினை காணப்படுவதாகவும் அதைத் தொடர்ந்து முரண்பாடு நிலவும் பிரதேசங்களிலும் அதற்கு அண்டிய பிரதேசங்களிலும் கடற்கரைப் பிரதேசங்களிலும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1999 இல் சிறுவர் செயற்பாட்டு ஆய்வுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 19,110 சிறுவர்கள் வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதுடன் நகர்ப்புற வீடுகளில்

வேலைக்கு அமர்த்தி வேலைவாய்ப்பு கொடுக்கும் வீதம் கூடுதலாக உள்ளதாகக் குறிப்பிடுகிறது (DCS1999). இலங்கையில் தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறுவர்களில் 60% ஆனோர் விவசாயத் துறையில் உள்ளதாக ILO/IPEC கற்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பெரும்பாலான சிறுவர்கள் கிராமப்புறங்கள், தோட்டப்புறங்கள் மற்றும் நகர்ப்புற சேரிகளிலிருந்து வருகின்றனர் (கன்னங்கரா, டி. சில்வா மற்றும் பாண்டிகமகே 2003).

சிறுவர்கள் தொழிற்துறையில் நுழைவதற்கு அவர்களின் வறுமை நிலையானது மேலும் ஏதுவாகிறது. முறையற்ற விதத்தில் தொழிலில் ஈடுபட கூடியதாக இருப்பது அவர்கள் சுரண்டப்படுவதை இன்னும் இலகுவாக்குகிறது. இதற்கு மாறாக வீட்டு நிலைமைக்கு பங்களிப்புச் செய்வதற்கு சிறுவர்கள் ஆவலாக உள்ளதால் இவ்வாறான வேலைகளைச் செய்வதற்கு அவர்களும் விருப்பம் காட்டுகின்றனர். சிறுவர் தொழிலைத் தடை செய்ய வேண்டும் என்பதற்காக இவ்விடயம் முற்று முழுதாகப் புறக்கணிக்கப்பட முடியாது. சிறுவர்களின் சுயமான இவ்விருப்பமானது தொழிற்தளங்களில் சிறுவர்களின் ஈடுபாடு தொடர்ந்து அவரகள் சுரண்டப்படுவதற்கு கட்டாயம் இடம் கொடுக்கும். அடிப்படைக் கல்வியானது சிறுவர் தொழிலைக் குறைக்கும் அதே நேரம் சிறுவர் தொழில் முற்றாகத் தடை செய்யப்படும்போது இவ்வருமான முதலில் பெருமளவு தங்கியுள்ள வீடுகளின் நலனையும் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கலாம். இலங்கையில் சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பான சட்டங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள, மென்மையான வேலைகள் உள்ளடக்கப்பட்டிருப்பது இவ்வேறுபாடான நிலைமையை மேலும் கடினமாக்கினாலும் இங்கு சிறுவர் பொறுப்புக்கள் பற்றி கற்பிக்கப்படுவதால் அவரகள் சில சிறிய, மென்மையான வேலைகளில் ஈடுபடவும் இடமுண்டு. சிறுவர்கள் செய்யக்கூடிய, செய்யமுடியாத வேலைகளை வகைப்படுத்துவதுடன் அவர்கள் விடுமுறைக் காலங்களில் ஈடுபடக்கூடியவாறு வேலைகளை வழங்கல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தேவைகளைப் பூர்த்தி செய்தல், இளைஞர்களைப் பதிவு செய்து கொள்ளல் மற்றும் வழங்கக்கூடிய மிகக்குறைந்த சம்பளம் போன்ற சிறுவர்களின் வேலை செய்யும் நிலைமைகளைச் சீராக்க உதவும் விடயங்களை மீள அறிவுறுத்துகிறது. தோழிற்றுறையிலுள்ள சிறுவர்கள் முறையற்ற விதத்திலேயே தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இம்முறையில் அவர்கள் பொருளாதார நலன்களை அனுபவிப்பதில்லை, தொழில் உறுதியற்றதாக இருப்பதுடன் வாழ்வில் உயர்வதற்கான எந்த வாய்ப்பையும் வழங்குவதில்லையாதலால் தொடர்ந்தும் வறுமையிலேயே வாடுகின்றனர்.

சிறுவர் தொழிலைப் பற்றி எடுத்தியம்பும் பல சர்வதேச ஒப்பந்தங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இலங்கை 1991 இல் சிறுவர் உரிமைகள் எனும் ஒப்பந்தத்தையும் 2002 இல் ஆயுதப் போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு கட்டாயமில்லாத நிபந்தனைகளையும் உறுதிப்படுத்தியது. மேலும் தொழில் செய்வதற்கான குறைந்த வயது தொடர்பான சர்வதேச தொழிலாளர் அமைப்பிலும் பங்குகொள்கிறது.

இக்குறைந்த வயதானது கட்டாயமான பாடசாலைக் கல்வியை நிறைவு செய்வதற்கான வயதிலும் கூடிய, அதாவது 15 இலும் கூடியதாக இருக்க வேண்டும் (குமாரசுவாமி மற்றும் சற்குணநாதன் 2006). தேசிய சட்டசபை 14 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர்கள் எந்த ஒரு தொழிலிலும் ஈடுபடுவதைத் தடுப்பதோடு சிறுவர்களின் வளர்ச்சி, விருத்திக்கான தேவைகள் நிறைவேற்றப்படுவது உறுதி செய்யப்படுமிடத்து 14-16 வயதிற்கிடைப்பட்டோரை சில நிலைமைகளின் கீழ் தொழில் செய்ய அனுமதிக்கிறது (கன்னங்கரா, டி. சில்வா மற்றும் பாண்டிகமகே 2002). மேலும் இச்சட்டமானது சிறுவர்கள் இரவு நேரங்களில் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதிலிருந்தும் தனியார் மற்றும் பொது சுரங்கங்கள் போன்ற கைத்தொழிற்சாலைகளில் உள்வாங்கப்படுவதிலிருந்தும் பாதுகாக்கிறது. 15 வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் கடற்றொழிலிலும், யுத்தக் கப்பல்களிலும் ஈடுபடுவது கூடாது (கன்னங்கரா குழு 2003).

சிறுவர்கள் தமது உரிமைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆதரவாக அவர்கள் பாடசாலைக்கு செல்லக்கூடியதுடன் பகுதி நேர வேலைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கும் முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென ஜயவீர குழுவினர் முன்மொழிகின்றனர். விவசாயச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் கிராமப்புற சிறுவர்களுக்கு விசேடமாக இம்முறை பொருந்துமென அவ்வறிக்கை பரிந்துரைக்கிறது. இவ்வகையான தொழிலின் பருவகாலத் தன்மையிலும் இது தங்கியுள்ளது. சிறுவர்களைத் தொடர்ந்தும் பாடசாலையுடன் இணைத்துவைத்திருப்பதற்காக கல்வித் திட்டத்தை கவர்ச்சிகரமாகவும் ஊக்கப்படுத்துவதாகவும் அமைப்பதற்கான தீர்வுகளை அவர்கள் கோருகின்றனர். கொள்கையளவில் இன்னும் பாரிய, திருத்தமான தரவுகள் சேகரிக்கப்பட்டு இத்தரவுகளின் முடிவுகள் முடிவெடுப்பவர்களை சரியாகச் சென்றடைய வேண்டும்.

## 7. இடம்பெயர்ந்த தாய்மார்களுள்ள டும்பங்களின் சிறுவர்கள்

20-25 வயதிற்கிடைப்பட்ட 6-9 வருடங்கள் பாடசாலைக் கல்வி பெற்ற திருமணம் முடித்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுள்ள பெண்களாகவே கம்பர்ட் (Gamburd 2005) இன் இலங்கையிலிருந்து மத்திய கிழக்கிற்கு இடம்பெயரும் ஒரு சராசரிப் பெண்ணைப் பற்றிய வர்ணனை உள்ளது. இவர்கள் பொதுவாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ளவர்களாக இருப்பதுடன் வீட்டுக்கு வெளியே வேலை செய்த முன் அனுபவமும் இல்லாதவர்களாவர். பிள்ளைகளுடனுள்ள தாய்மார்கள் தமது பிள்ளைகளை விட்டுச்செல்வதற்கு மிகவும் கடினமான ஒரு தீர்மானத்தையே எடுக்க வேண்டியுள்ளனர். மற்றும் அவர்கள் நாட்டிலிருந்து வெளியே இருக்கும் போதும் சிறுவர்களின் கவனிப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர். தாயின்றி ஒரு பிள்ளையை விட்டுச் செல்வதென்பது ஒரு ஆபத்தான விடயமாகும். ஆனால் தமது குடும்பத்தின் எதிரகால நலனைக் கருத்தில் கொண்டு சிலர் இவ்வாபத்தான தீர்மானத்தை எடுக்கின்றனர்.

> “ஒரு குழந்தையின் உரிமைகளை நிலைநிறுத்துவதை குடும்பத்தின் பொருளாதார உறுதியைப் பாதுகாப்பதுடன் ஒப்பிடும் போது பெற்றோர்கள் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவதிலும் பொருளாதார உறுதிப்பாட்டையே கூடிய நன்மையானதெனக் கருதுகின்றனர்” (பிரியதர்ஷனி 2000:35).

இந்நிலைமையைப் பற்றியும் இதனால் ஏற்படும் விளைவுகளையும் பற்றிய ஒரு தெளிவான வடிவம் பெறும் பொருட்டு அண்மையில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save the Children 2006) தாய்மார்கள் இடம்பெயர்வால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை நேர்கண்டது. தாய்மார்களின் தானத்தில் வேறு அங்கத்தவர்கள் பங்கெடுப்பதால் தாய்மார்களின் இழப்பினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வது பொதுவான ஒரு முடிவாக இவ்வாய்வு கண்டுபிடித்துள்ளது. பல தந்தைமார்கள் தற்காலிகமாகவேனும் தாய்மாரகளின் வேலைகளை கையிலெடுத்துச் செயற்படுகின்றனர். குறிப்பாக இளம் குழந்தைகளின் உளத் தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற விடயங்களில் தாய்மார்களின் இழப்பை பூரணமாக ஈடுசெய்ய முடியாவிடினும், சிறுவர்களுக்கான அன்பும் கவனிப்பும் பொதுவாக உயர் தரத்திலேயே உள்ளது. எடுக்கப்பட்ட மாதிரியில் இடம்பெயர்ந்த தாய்மார்களில் அரைவாசிப்பேர் தமது குழந்தைகளுடன் தொடரான, ஒழுங்கான மீள் வருகைகளாலும் ஒழுங்கான தொலைபேசித் தொடர்புகளாலும் தம் உறவைப் பேணியே வருகின்றனர். இக்குடும்பங்களைக் கவனிப்பவர்களுடன் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணுவதிலும் சிறுவர்கள் மீதான கவனிப்பையும் கருதும் போது சமுதாயமும் சமுதாயத்திலுள்ள பெரியார்களும் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். பல தரவுகளின் படி தாயின் இழப்பு முழுமையாக ஈடுசெய்யப்படாவிடினும் சிறுவர்களைக் கவனிப்பதற்கான ஏற்பாடுகள் போதுமானதாக உள்ளதாகவே அறியப்பட்டுள்ளது.

இக்குடும்பங்கள் ஏனைய குடும்பங்களை விட புதிய ஆடையணிகள், சமூக நிறுவனங்களுக்கான அதிக பிரவேசம் மேலும் கல்வி மற்றும் தனியார் மருத்துவ கவனிப்பு போன்ற பொருளாதார நன்மைகளை எய்தியுள்ளன. எல்லாத் தரவுகளிலும் அந்நியச் செலாவணியின் மூலம் பெரும்பாலான சிறுவர்கள் சிறந்த ஒரு வாழ்க்கைத் தரத்தை அனுபவிப்பதாகவே முடிவுசெய்துள்ளனர். இருந்தாலும் நிதி முகாமைத்துவத் திறன் குறைவாக உள்ளதால் இடம்பெயர்வதற்கான நோக்கம் அதாவது வீடு கட்டுதல் போன்ற பிரதான நோக்கங்கள் பொதுவாகவே நிறைவேற்றப்படவில்லை. எல்லா ஆய்வுகளும் சிறுவர்கள் மீதான எதிர்மறையான தாக்கங்களை எடுத்துக்காட்டுகின்றன. இருந்தாலும் இங்கு காரண விளைவுகள் பற்றிய பங்குகள் தெளிவற்றன என்பது முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பெரும்பாலான வேலை செய்யும் இடம் பெயர்ந்த தாய்மார்கள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ளவர்களாதலால் இக்குடும்பங்கள் தாய்மார்கள் இடம்பெயர்வதற்கு முன்னரே இல்லாமை, பலவீனம் எனபவற்றை அனுபவித்துக் கொண்டிருந்திருப்பார்கள். ஊடகங்கள் தாய்மார்களின் இடம்பெயர்வால் வந்த எதிர்மறையான விளைவுகளை

உணர்வுபூர்வமாக காட்டுவது ஒரு இலட்சியத் தாயின் பங்களிப்புக்களைக் கருத்தில் கொண்டேயாகும். சிறுவர்கள் மீதான எதிர்மறையான தாக்கமானது கவனிப்புக் குறைவு முதல் உடல் மற்றும் உளத் துஷ்பியோகம் வரை உள்ளன. இருந்தாலும் இவை தாயின் இல்லாமையால் மாத்திரம் வந்த ஒரு நிலைமை என முடிவு செய்வது தவறாகும். இவ்வாறான குடும்பங்களில் தாயின் பிரிவுக்கு முன்னரே குடும்ப ஒழுங்கீனம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. உண்மையில் இவ்வாறான மன அழுத்தமான உறவுகளை இல்லாதொழிக்க உதவிய ஒரு வழியாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைந்துள்ளது (டயஸ் 2000:6).

இடம்பெயர்ந்த தாய்மார்களுள்ள குடும்பங்கள் எதிர்நோக்கும் சில பிரதான பிரச்சினைகளை ஆராய்ந்துள்ள இச்சுருக்கமானது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பலவீனமான தன்மையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. இருந்தாலும் இப்பலவீனமான தன்மையானது பொதுவாக தாழ்ந்த சமூக-பொருளாதார நிலை மற்றும் குடும்பத்துடனான அல்லது சமுதாயத்துடனான ஒற்றுமை குறைவு என்பவற்றுடன் இணைந்த பிச்சினைகளின் அடையாளமொன்றாகும். இவையே இத்தாய்மார்கள் குடும்ப நிலையை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு முயற்சியாக வெளியேறத் தீர்மானிக்க வைப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமைகின்றன. துரதிஷ்டவசமாக கடன்களை அடைப்பதற்கு அவர்கள் நினைத்ததை விடக் கூடிய காலம் செல்வதாலும் அவர்கள் அனுப்பும் பணம் பல சந்தர்ப்பங்களில் பிரதான கவனிப்பாளரால் சிறப்பாகக் கையாளப்படாததாலும் இந்நோக்கம் நிறைவேற்றப்படுவதில்லை என டயஸ் (2000) கூறுகின்றார்.

## 8. சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களின் நலனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் பலவிதமான தெரிந்துகொண்டே செய்யும் செயல்களை பரந்தளவில் குறிப்பிடும் ஒரு பதமாகும். இச்செயல்களில் பாடசாலைகளில், சமுதாயத்தில் அல்லது வீட்டில் சொற்களால் கொடுமைப்படுத்தப்படல் தொடக்கம் வர்த்தக ரீதியான, பாலியல் ரீதியான சுரண்டல் மற்றும் சட்ட விரோத வர்த்தகங்கள் வரை உள்ளடக்கப்படலாம். வர்த்தக ரீதியான சுரண்டல் போன்ற சில வகையான துஷ்பிரயோகம் ஏழைச் சமுதாயங்களிலேயே அதிகம் காணப்படுகின்றன. ஆனால் வித்தியாசமான பல சமூக பொருளாதார சூழல்களில் வாழும் சிறுவர்களும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகக் கூடிய பலவீனமானவர்களாகவே உள்ளனர். இது சிறுவர்களைத் துஷ்பிரயோகங்களுக்குப் பலவீனமாக்கும் கல்வியறிவின்மை, அடிப்படை உட்கட்டமைப்புக்கள் மற்றும் நீதித்துறை ஒத்துழைப்புப் போதாமை, அதிகாரம் கொடுக்கப்படாமை மற்றும் சிறுவர் பால், வயதுடனான அதிகாரத் தொடர்புகள் பற்றி அறிவுறுத்தப்படாமை போன்ற வேறும் பல குறிப்பிடத்தக்க காரணங்களையும் கருத்திற் கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகின்றது. பெண்

பிள்ளைகள் தமது வீட்டிலும் சமுதாயத்திலும் உள்ள பலம் வாய்ந்த ஆண் குடும்ப அங்கத்தவர்களால் அல்லது நண்பர்களால் ஆதிக்கத்துக்குள்ளாக்கப்படல் அல்லது வீட்டு வேலைகளுக்காக, விபச்சாரத்திற்காக நெருக்கப்படல் போன்ற நெருக்கடிகளுக்கு அதிகம் முகம் கொடுக்கும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். என்றாலும் சுற்றுலாத்துறை விருத்தியடைந்த பிரதேசங்களில் வெளிநாட்டு துஷ்பிரயோகிகளுக்கு ஆண் சிறுவர்களே மிகவும் பலவீனமானவர்களாக உள்ளனர். புவியியல் ரீதியாகவும் குறிப்பிட்ட சில பிரதேசங்கள் பல வகையான துஷ்பிரயோகங்களுக்கு அதிகம் பலவீனமாக உள்ளன.

- நகர்ப்புற குடிசைப் பகுதிகள்: சிறுவர்கள் சிறுவர் தொழில் தொடக்கம் பாலியல் சுரண்டல் வரையான பல வகையான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகக் கூடியவர்களாயுள்ளனர்.
- தோட்டப் புறப் பிதேசம்: இப்பிரதேசங்களே சிறுவர் தொழிலுக்கான பிரதான முதன்மைப் பிரதேசமாகும்.
- தென் மேற்குக் கடலோரப் பிரதேசம்: சிறுவர்கள் (குறிப்பாக ஆண் பிள்ளைகள்) 'பாலியல் சுற்றுலாத்துறை' ஆலும் பாலியல் சுரண்டலாலும் அதிகம் தாக்கப்படக் கூடியவர்கள்.
- வட கிழக்கு மாகாணம்: பல சிறுவர்கள் மீன்பிடித் தொழிலிலும் (வாதியாக்கள்) அகதி முகாம்களிலும் (குறிப்பாக மட்டக்களப்பைச் சூழ்ந்த பிரதேசங்கள்) வேலைக்கமர்த்தப்படுகின்றனர். மேலும் இப்பிரதேசங்களில் பாலியல் துஷ்பிரயோகத்திற்காக சிறுவர்களுக்கு அதிகம் கேள்வி உள்ளது. நலன்புரி முகாம்களில் வாழும் சிறுவர்கள் கட்டாய ஆட்சேர்ப்பிற்கு உள்ளாவதற்கு அல்லது சிறுவர் தொழில்களுக்காக நெருக்கப்படல் போன்ற ஆபத்துக்களை அதிகம் முகம் கொடுக்கின்றனர்.

பல சான்றுகள் இந்நிலைமையை வாழ்க்கையில் ஒரு சாதாரண நிகழ்ச்சி போன்று காட்டினாலும் இலங்கையில் துஷ்பிரயோகம் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 1980 களில் சிறுவர் தொடர்பான விடயங்களிலான ஆய்வுகள் மற்றும் விளம்பரங்களில் ஏற்பட்ட திடீர் ஆர்வத்தையும் தொடர்ந்து 1980, 1990 களில் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு குறிப்பிடப்பட்ட இடம் கொடுக்கப்பட்டு நோக்கப்பட்டது. 1990இல் பண்டாரநாயக்க தலைமைத்துவத்தின் கீழ் தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை (NCPA), கொடுமை மற்றும் பாலியல் துஷ்பிரயோகப் பிரச்சினைகளுக்கு அதிகார பூர்வமான எதிர்ப்பை முன்வைத்தது. NCPA கொடுமை மற்றும் பாலியல், தொழில் துஷ்பிரயோகம் என்பவற்றிற்கான புள்ளி விபரங்களைச் சேகரித்தது. அதே போல் உளவியலாளர்கன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சிறுவர் உரிமை தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கும் பிரச்சாரங்களினூடு அவர்களுக்கான ஒத்துழைப்பையும் வழங்கியது. இலங்கையானது சிறுவர் உரிமை தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதால்


துஷ்பிரயோகத்தினாலான ஆபத்துக்கள் மற்றும் தாக்கங்கள் பற்றி சிறுவர்களுடனும் பெற்றோருடனும் நேரடியாகத் தொடர்பாடுவதற்கான முக்கியமான முயற்சிகளும் எடுக்கப்பட்டள்ளன.

NCPA தகவல்களைச் சேகரிப்பதற்காக எடுத்த முயற்சிகளையும் மீறி இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக நிலை பற்றிய அறிவில் இன்னும் பெரிய இடைவெளிகள் உள்ளன. NCPA சேகரித்த புள்ளிவிபரங்கள் பதிவுசெய்யப்பட்ட நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டன. ஆனால் பல நிகழ்வுகள் பதிவு செய்யப்படாது போயுள்ளதால் இத்தரவுகள் சுட்டிகளாக மட்டுமே கொள்ளப்படலாம். இலஙகையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான தரவுகளும் தகவல்களும் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளன. மற்றும் அவை காலம் கடந்தவையாகவோ பொதுப்படுத்தப்படாததாகவோ (சிறிய மாதிரி அளவு) அல்லது நம்பிக்கை அற்றதாகவோ உள்ளதால் இலங்கையில் சிறுவர் அனுபவிக்கும் துஷ்பிரயோகங்கள் பற்றி ஒரு பூரணமான மீளாய்வு வரையறுக்கப்பட்டதாகும். உதாரணமாக கொடூரமான துஷ்பிரயோகம் மற்றும் உள ரீதியான துன்புறுத்தல்கள் பற்றி மிகச் சிறிதளவு தகவல்களே கிடைத்துள்ளன.

பாலியல் துஷ்பிரயோகங்கள் மீது பலமான அழுத்தங்கள் குறிப்பாக இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளாலான வர்த்தக ரீதியான பாலியல் சுரண்டல்கள், 1980, 1990 களில் நடாத்தப்பட்ட தகவல் திரட்டல்களில் பாரியதோர் இடத்தைப் பிடித்தன. இது ஏனைய விதமான துஷ்பிரயோகங்களிலிருந்து அல்லது வீட்டளவிலான துஷ்பிரயோகங்களிலிருந்து ஆய்வுகளை வேறு பக்கமாக சரிக்கிறது. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் UNICEF புள்ளிவிபரங்கள் இலங்கையில் எறத்தாழ 40,000 சிறுவர்கள் விபச்சாரத்தில் பயன்படுத்தப்படும் அதே நேரம் 5000 முதல் 30,000 ஆண் பிள்ளைகள் மேலைத்தேய துஷ்பிரயோகிகளால் பயன்படுத்தப்படுவதாகவும் கணிப்பிட்டுள்ளது. ஆனால் இப்புள்ளிவிபரங்கள் பாலியல் சுரண்டல்களில் ஈடுபட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வாறு பரந்தளவில் வேறுபடுகிறது எனக் காட்டுகிறது. மேலும் பெரும்பாலான தகவல்கள் நம்பத்தகுந்தவை அல்ல. ஆனாலும் வர்த்தக ரீதியான சுரண்டல்கள்களாகட்டும் வீட்டளவிலான சுரண்டல்களாகட்டும் பாலியல் துஷ்பிரயோகங்களே அதிகூடிய சுரண்டல் வகையாக NCPA அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (படம் 8.1).

துஷ்பிரயோகமானது வறிய சமூக-பொருளாதார பிண்ணனி, கல்வியறிவின்மை மற்றும் போதிய கவனிப்பின்மை என்பவற்றுடன் தொடர்புற்றுள்ளது. இப்பலவீனமான தன்மையானது குறித்த சில புவியியல் பிரதேசங்கள் அல்லது பிரிவுகளில் வாழ்கின்ற, உடைந்த குடும்பங்களில் வாழும் மற்றும் பால் தொடர்பான பாகுபாடுகளால் கிளறிவிடப்படுகிறது. ஆனாலும் இவ்வாறு தெளிவான சமூக-பொருளாதார காரணிகளை விடுத்து, இலங்கையில் சிறுவர்களின் பலவீனத்தை அதிகரிக்கும் ஒரு உள்ளீடான பிரச்சினையும் உள்ளது. அதாவது பாலியல் மற்றும் கொடூரமான துஷ்பிரயோகங்களை

**படம் 8.1: NCPA இல் பதியப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகச் செயல்கள் - 2005**




*முதல்*: தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

ஏற்றுக் கொள்ளும் பழக்கம், இன்னும் சில சமுதாயங்களில் (குறிப்பாக கரையோரப் பிரதேசங்கள்) விபச்சாரம் 'நிறுவன ரீதியாக' இழுக்கோ, வெட்கமோ இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் உண்மை என்பனவே அவையாகும் (டயஸ் 1999). இது வர்த்தக ரீதியாக பாலியல் சுரண்டல்களைத் தெரிவு செய்து ஈடுபடும் சிறுவர்களின் விடயத்தில் மிகப் பொருத்தமாக உள்ளது.

## 9. நிறுவனங்களின் ஆதரவு

சிறுவர் இல்லம், சிறுவர் சிறை அல்லது சிறுவர் நீதித் திட்டங்களின் அமைப்புக்கள் போன்ற நிறுவனங்களில் வைத்து வளர்க்கப்படும் சிறுவர் மீதான பரந்த ஆய்வுகள் மிகச் சிறிதளவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு அமைப்புகளினூடு வளர்க்கப்படும் சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள், சிறுவர் வேலையிலமர்த்தப்படல், கடுமையான வறுமை, குடும்ப குழப்பங்கள் அல்லது இழப்பு போன்றவற்றிற்கு ஆளாகக் கூடியவர்களாக உள்ளனர். கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் சிறுவர்கள் அமைப்புக்களிடம் கையளிக்கப்படும் போது பெரும்பாலான அமைப்புகளிலிருந்து அவர்கள் பெறும் அனுபவமானது இத்தாக்கங்களிலிருந்து அவர்களை மிகச் சிறிதளவே மீட்பதுடன் பதிலாக இன்னும் அதிகமான இல்லாமை, ஒதுக்கப்படல் மற்றும் பலவீனங்களுக்கு உள்ளாகின்றனர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save the Children) வட கிழக்கு மாகாணம் உட்பட நாடு பூராகவும் சிறுவர் அமைப்புகளின் விடயங்களை 'சிறுவர்களுக்கான அமைப்புக்களின் கவனிப்பு' எனும் ஆய்வில் 2005 இல் கோவைப்படுத்தியது (பில்சன் மற்றும் கொக்ஸ் 2005). அறிக்கையில் கண்டெடுக்கப்பட்ட தரவுகளின் படி உத்தியோகபூர்வமான

புள்ளிவிபரவியலிலும் கூடிய எண்ணிக்கையான சிறுவர் அமைப்புக்களும் அவற்றின் கவனத்தின் கீழ் கூடிய எண்ணிக்கையான சிறார்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. விசேடமாக வட கிழக்கு மாகாணத்தில் அரசில் பதியப் பெறாத இல்லங்கள் சுட்டிக் காட்டப்பட்டன. இவ்வெண்களின் அடிப்படையில் அரச தாபனங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளமை தெளிவாகும். வழக்கு விசாரணைகளுக்காக காத்திருக்கும் சிறுவர்கள் வழக்கு முடியும்வரை அரச நிறுவனங்களில் வைக்கப்பட்டு கவனிப்பாரற்று உள்ளனர்.

**அட்டவணை 9.1: மாகாண ரீதியில் நிறுவன வகைகளின் பரம்பல்**

| மாகாணம் | ஏற்றுக கொள்ளும் இல்லம் | பதிவு செய்யப்பட்ட பாடசாலை | சிறை இல்லம் | காவல் இல்லம் |
|---|---|---|---|---|
| மேல் | 1 | 2 | 2 | |
| தென் | 1 | 1 | 1 | 2 |
| வட கிழக்கு | 1 | | | |
| மத்திய | 1 | | | |
| மொத்தம் | 4 | 3 | 3 | 2 |

| மாகாணம் | தற்காலிக இல்லம் | அங்கவீனச் சிறார்களுக்கான இல்லம் | ஏனையவை | இல்லங்களின் மொத்த எண்ணிக்கை | சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| மேல் | 72 | 12 | | 89 | 4,594 |
| தென் | 20 | 6 | | 31 | 1,063 |
| வட கிழக்கு | 150 | 8 | 15 | 174 | 8,622 |
| மத்திய | 30 | 4 | | 35 | 1,279 |
| மொத்தம் | **272** | **30** | **15** | **329** | **15,068** |

*முதல்:* பில்சன் மற்றும் கொக்ஸ், 2005: 7

சிறுவர் நீதித் திட்டத்தின் கீழ் பிடிக்கப்பட்ட சிறுவர்கள் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் விசாரணைக்கு முன்பே சிறை இல்லங்களில் வைக்கப்படுகின்றனர். ஒரு குற்றத்துக்குப் பொறுப்பாகக் கூடிய மிகக் குறைந்த வயது இலங்கையில் எட்டாக உள்ளதுடன் 14 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒருவரே சிறுவர் எனும் வரையறைக்குட்படுகிறார்.

14-18 வயதிற்கு இடைப்பட்டோர் இளம் வயதினராகக் கொள்ளப்படுகின்றனர். துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட, விசாரணைகளை எதிர்பார்த்திருக்கின்ற அல்லது குற்றமிழைத்த 18 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர்கள் யாவரும் சிறுவர் நீதித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு பாகுபாடின்றி அமைப்புக்களிடம் கையளிக்கப்படுகின்றனர். துஷ்பிரயோகங்களிற்கு ஆளான சிறார்கள் இல்லங்களில் வைத்துக் கவனிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் அதற்கான இல்லங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் சிறை அமைப்புகளிலேயே வைக்கப்படுகின்றனர். அங்கு சிறுவர்களின் தேவைகள் மற்றும் உணர்வுகளிற்கு ஏற்ப சேவையாற்றக்கூடிய தரமான ஊழியர்கள் குறைவாக உள்ளதால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். போதிய இல்ல அமைப்புகளிற்கான வசதிகளின்மையால் பலவாறான குற்றமிழைத்தோர்களும் பாதிக்கப்பட்டோர்களும் ஒரே இல்லத்தில் வைக்கப்படுகின்றனர் (குமாரசுவாமி மற்றும் சற்குணநாதன் 2006).

**அட்டவணை 9.2: 2002 இல் அனுமதிக்கப்பட்ட இல்லங்கள், சிறுவர்களின் எண்ணிக்கை**

| இல்லங்களின் வகை | இல்லங்களின் எண்ணிக்கை | சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிறை இல்லம | 4 | 1161 |
| பதிவு செய்யப்பட்ட பாடசாலை | 4 | 242 |
| ஏற்றுக் கொள்ளும் இல்லம் | 8 | 326 |
| காவல் இல்லம | 1 | 183 |
| அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை | 1 | 3 |
| தேசிய பயிற்சி நிலையம் | 1 | 24 |
| தற்காலிக சிறை இல்லம் | 3 | 71 |
| தற்காலிக இல்லம் | 201 | 9485 |
| மொத்தம் | **223** | **11,495** |

*முதல்:* நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகளுக்கான திணைக்களம்

வறுமையும் சிறுவர் நிறுவனமயப்படுத்தப்படலும் மிகவும் நெருங்கிய தொடர்புடையவை. இக்கவனிப்பு இல்லங்களுக்கு சிறுவர்கள் அனுமதிக்கப்படுவதன் பிரதான காரணம் வறுமையாகும். அத்தோடு வறிய குடும்பப் பின்னணிகளிலிருந்து வரும் சிறுவர்களே பெரிதும் சிறிய குற்றங்களை இழைக்கக்கூடியவர்களாயுள்ளனர்.

பாதிப்புக்குள்ளாகக்கூடிய குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் தொழில்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும் அமைப்புகளினுள் உள்ளடக்கப்படக்கூடிய சார்தன்மையைக் காட்டுகின்றனர். எனவே நிறுவனங்களின் கவனிப்பின் கீழுள்ள அல்லது சிறுவர் நீதித் திட்டத்தின் கீழுள்ள சிறுவர்கள் குறிப்பாக கூடிய

அன்பும் ஒத்துழைப்பும் வேண்டப்படுபவர்களாவர். இவ்வத்தியாயத்தில் கருதப்பட்ட ஆய்வுகளிலிருந்து சிறுவர்களுக்கான ஆதரவு குறைவாகவே உள்ளது எனவும் அவர்கள் தொடர்ந்தும் பௌதீக வசதிகள், போதுமான சுகாதாரம் இன்றி அவர்களின் குடும்பங்கள் மற்றும் வீட்டுக்கு வெளியேயான மக்களுடனான சாதாரண சமூக இடைத் தொடர்புகளிலிருந்து நீக்கப்பட்டு நிறுவனத்திற்கு வெளியேயான வாழ்க்கைக்குத் தயார்படுத்தப்படாத நிலைகளில் உள்ளனர் எனக் குறிப்பிடுகிறது.

## 10. வீதிச் சிறுவர்கள்

இம்மீளாய்வில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய பல விடயங்களைப் போல் வீதிச் சிறுவர்களின் கணக்கெடுப்பும் கண்டுகொள்ளக் கடினமானதுடன் தரவுகளும் நம்பத்தகுந்தவையாக இல்லை. மேற்கொள்ளப்பட்டுள்ள பல ஆய்வுகளும் காலம் கடந்தவையாக உள்ளதால் அவற்றின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாகவும் தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லக்கூடியனவாகவும் உள்ளன. எனவே இவ்வத்தியாயமானது இவ்வெண்ணிக்கையின் அடிப்படையிலல்லாது வீதிச் சிறுவர்கள் இலக்கிய ஆய்வுகளில் எவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதிலும் இக்கூட்டத்தை வரைப்படுத்துவதில் எவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனையும் சுட்டிக்காட்டுகிறது. வீதியோரங்களில் தமது வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் பெரும்பாலான சிறுவர்கள் கடுமையான இல்லாமையால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது மிகவும் தெளிவாக உள்ளதுடன் அவர்கள் பலவீனமானவர்களாகவும் சாதாரணமாக தம் சிறு பிராயத்தில் அனுபவிக்கும் பல விடயங்களிலிருந்து நீக்கப்பட்டும் உள்ளவர்களாவர். இவ்வில்லாமை, நீக்கம் மற்றும் பலவீனமான தன்மை எனும் விடயங்களே இச்சிறுவர்கள் வீதிகளில் வாழ்க்கையைத் தொடர்வதற்கும் அவர்கள் வீதிகளிற்குக் கொண்டுசெல்லப்பட்டபின் அவர்களின் நிலைமையிலான மாற்றங்களிற்கும் பொதுவான காரணங்களாகும்.

வீதிச் சிறுவர்கள் என்பது நகர்ப்புறங்களில் தோன்றுகின்ற காட்சியாகும். மேலும் வறிய நகர்ப்புறப் பிரதேசங்களிலுள்ள சிறுவர் வறுமை தொடர்பாகக் கருதும் போது வீதிகளில் நிரந்தரமாக வசிக்கும் சிறுவர்கள் மட்டுமல்லாது நகர்ப்புறப் பிரதேசங்களின் கவனிப்பாரற்று இருக்கும் குடியேற்றங்களில் வசிக்கும் ஏழைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுவது முக்கியமானதாகும். இருந்தாலும் நகர்ப்புறப் பிரதேசங்களில் வீதிகளில் வசிக்கும் சிறுவர்கள் பொதுவாக வறிய கிராமப் புறங்களிலிருந்து ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடி வந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

டி. சில்வா மற்றும் டி. சில்வா (திகதி குறிப்பிடப்படாத) வீதிகளிலான சிறுவர்களில் இரு குழுக்களை அடையாளம் காண்கிறார்கள். முதலாவதாக இரக்கும் தொழிலில்

ஈடுபட்டுள்ள தமது பெற்றோர் அல்லது கவனிப்பாளருடன் சேர்ந்து முழு நேரமும் உள்ள சிறுவர்கள், இரண்டாவதாக வீதியோரங்களில் வேலை செய்து இரவில் வீடு திரும்பும் சிறுவர்கள் என்பனவே அவையாகும்.

வேலை தேடித் தனியாக நகரங்களுக்கு வந்து இன்னமும் தமது குடும்பங்களுடன் தொடர்புகளை வைத்துள்ள சிறுவர்கள் இன்னுமொரு பிரிவில் அடங்குகின்றனர். ஒரு CENWOR ஆய்வு (1991) வீதிகளில் தனியே வசிக்கும் சிறுவர்ளை ஏழு வயதான மிகவும் வயது குறைந்தவர்களாகவும் பெரும்பாலானவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திக் கொண்ட 6-15 வயதிற்கிடைப்பட்டவர்களாகவும் காட்டுகிறது. சிறுவர்களிற்கு உறுதியாக துணை செய்யக்கூடிய அமைப்புக்கள் இல்லாத போது, வீட்டவர்களால் முறையின்றிக் கவனிக்கப்படும் போது மற்றும் புறக்கணிக்கப்படும் போது அவர்கள் வீதிகளிலான வாழ்க்கைக்கு உள்ளாகக் கூடிய பலவீன நிலைக்கு ஆளாகின்றனர்.

இவ்விடயத்தில் தெளிவான ஆய்வுகள் குறைவாகும். பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை நிறுவுவதற்கு மட்டுமன்றி இச்சிறுவர்களின் தேவைகளை, மதிப்பை மற்றும் நிலைமையை சரியாக விளங்கிக் கொள்வதற்கும் வீதிகளில் தொடரும் வாழ்க்கையில் பால் ரீதியான விளைவுகள் அதே போல் அவர்களின் நிலைமைகளின் மாறுபடும் தன்மை போன்றவற்றையும் விளங்கிக் கொள்வதற்கு இன்னும் ஆராய்ச்சிகள் தேவையாக உள்ளன. நகர்ப்புறங்களிலான வீதிச் சிறுவர்களின் மீளும் தன்மையும் போராடுவதற்கான யுக்திகளும் தெளிவாக வெளிக்காட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 11. முடிவுரை

இச்சுருக்கமானது தற்போதுள்ள ஆய்வு வளங்களில் முன்கொண்டுவரப்பட்டுள்ளபடி இலங்கையில் சிறுவர் வறுமை தொடர்பான ஒரு மேற்பார்வையை வழங்குவதற்காக முயற்சித்துள்ளது. இத்தொகுப்பானது ஆரோக்கியம், போசணைக் குறைபாடு, கல்வி, முரண்பாடு, சிறுவர் தொழில், இடம்பெயர்ந்த தாய்மார்களைக் கொண்ட குடும்பங்களின் சிறுவர்கள், சிறுவர் துஷ்பிரயோகம், நிறுவனங்களின் ஆதரவு மற்றும் வீதிச் சிறுவர்கள் போன்ற பிரிவுகளைக் குறிப்பிட்டு நோக்கியுள்ளது. இப்பகுதியில் குறிப்பிட்டுள்ள முடிவுகள் இப்பிரிவுகளுக்குள்ளான விடயங்கள் தொடர்பாக சிறுவர் வறுமையைக் கருதும் போது நோக்க வேண்டிய முக்கியமான குறிப்புக்களை எடுத்துக் காட்டுகின்றது. இது இப்பகுதியிலான மேலதிக ஆய்வுகளின் தேவையையும் பங்குதாரர்களுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கான தேவையையும் தெளிவுபடுத்தி முடிக்கிறது.

இலங்கை ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது குடித்தொகையின் சுகாதாரம் மற்றும் சுகாதார சேவைகளில் ஓரளவு சிறந்து விளங்குகிறதாகக் குறிப்பிடுகிறது. பெரும்பாலான பிரதேசங்களில் மருத்துவர்களை மற்றும் உட்கட்டமைப்புக்களை அணுகும் வாய்ப்புக்கள் நன்றாக உள்ளதுடன் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வும் அதிகரித்து வருகின்றது. பிரச்சினைகள் பல்வேறு பட்டதாக இருப்பதால் சிறுவர்களின் சுகாதார நிலை பற்றி பொதுமைப்பாடாகக் குறிப்பிடுவது கடினமாகும். இருந்தாலும் பெரும்பாலும் சுகாதாரக் குறைபாட்டிற்கு இல்லாமை ஒரு தெளிவான காரணியாகும். போதியளவு வாழ்க்கைத்தரம், கல்வி, பிரதான உட்கட்மைப்புக்கள், சந்தை வாய்ப்புக்கள் இல்லாத வீடுகளே சுகாதாரக் குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

சிறுவர் போசணைக் குறைபாடு இலங்கையில் ஒரு பிரதான பிரச்சினையாகும். சிறந்த மனித அபிவிருத்திச் சுட்டிகளையும் முன்னேற்றங்களையும் கொண்டிருந்தாலும் இலங்கை இன்னும் தாய்வழிப் போசணைக் குறைபாடு, குறைப் பிறப்பு நிறை என்பவற்றால் பாதிக்கப்பட்டே உள்ளது.

இலங்கையில் கல்விக்கான அர்ப்பணிப்பின் விளைவாக உயர் எழுத்தறிவு வீதம் மற்றும் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் சிறுவர்களுக்கான அடிப்படைக் கல்வி கிடைத்துள்ளது. என்றாலும் இத்துறையிலான குறைவான முதலீட்டாலும் பாடத்திட்டத்தை நவீனப்படுத்தாமையாலும் அண்மைக் காலங்களில் சிறந்த ஒரு முன்னேற்றத்தைக் காட்டவில்லை.

பாதுகாப்பின்மை, கொடூரம், உள, உடல் உளைச்சல் மற்றும் பொருள் வளம் இல்லாமையால் பாதிக்கப்பட்ட ஒரு சந்ததியுடனான, இலங்கையில் சிறுவர்களின் மீதான முரண்பாடுகளின் தாக்கங்கள் பற்றிக் கூறும் பெருமளவு ஆக்கத் தரவுகள் உள்ளன. என்றாலும் தாங்கமுடியாத கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்க இச்சிறுவர்கள் இசைவாக்கமடைந்துள்ளார்கள் என்றும் சில சுவாரசியமான தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

பெரும்பாலான சிறுவர் தொழில் தொடர்பான புள்ளிவிபரங்கள் காலம் கடந்தவையாகவும் புதுப்பிக்கப்பட வேண்டியவையாகவும் உள்ளன. சிறுவர் தொழிலாளர்கள் பல்வேறுபட்ட இல்லாமைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்; அவர்கள் அதிக வேலைச்சுமை, குறைந்த ஓய்வு, கல்வியிலான மறுப்பு, மோசமான வேலை நிலைமைகள், வேலை வழங்குநர்களாலான கொடுமைகள், பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் குறைந்த ஊதியம் போன்றவற்றை அனுபவிக்கின்றனர்.

இடம்பெயர்ந்த தாய்மார்களுள்ள குடுமபங்களின் சிறுவர்கள் தொடர்பான ஆய்வுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save the Children 2006) நிறுவனத்தின் இதன்

விளைவுகளைக் கருத்தில் கொண்ட ஆய்வுடன் சேர்த்தும் குறைவாகவே உள்ளது. இடம்பெயர்ந்த தாய்மார்களுள்ள குடுமபங்களைத் தாக்கும் சில பிரதான விடயங்கள் இக்குடும்பங்களின் பலவீனமான தன்மையைக் குறித்துக் காட்டுகிறது. என்றாலும் இப்பலவீனமான தன்மையானது குறைந்த சமூக-பொருளாதார நிலைமை மற்றும் குடும்பத்துடனான அல்லது சமுதாயத்துடனான ஒற்றுமைக் குறைவு என்பவற்றுடன் இணைந்த பிச்சினைகளின் அடையாளமொன்றாகும் என்பது முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

தற்போதுள்ள துஷ்பிரயோகம் தொடர்பான பெரும்பாலான தரவுகள் வர்த்தக ரீதியான சுரண்டல்களுக்கே முக்கியத்துவம் தருகின்றன. இது ஆய்வுகள் அடிப்படைப் பிரச்சினைகளின் உண்மைகளை வெளிக்காட்டாமல் நடுநிலையின்றி செயற்படுவதைத் தெளிவுபடுத்துகிறது. துஷ்பிரயோகமானது குறைந்த சமூக-பொருளாதார பிண்ணனி, கல்வியறிவின்மை மற்றும் போதியளவு ஆதரவின்மை போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது.

நிறுவனங்களின் கவனிப்பின் கீழுள்ள அதாவது சிறுவர் இல்லம், அல்லது சிறுவர் நீதித் திட்டங்களின் அமைப்புக்கள் - சிறை இல்லம் போன்றவற்றில் சிறுவர்கள் தொடர்பான பூரணமான ஆய்வுகளும் குறைந்தளவே உள்ளன. என்றாலும் வறுமை மற்றும் சிறுவர் நிறுவனமயப்படுத்தப்படலிற்கிடையான தொடர்புகள் பலமாகவே உள்ளது; இக்கவனிப்பு இல்லங்களுக்கு சிறுவர்கள் அனுமதிக்கப்படுவதன் பிரதான காரணம் வறுமையாகும். அத்தோடு வறிய குடும்பப் பிண்ணனிகளிலிருந்து வரும் சிறுவர்களே பெரிதும் சிறிய குற்றங்களை இழைக்கக்கூடியவர்களாயுள்ளனர்.

இம்மீளாய்வில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய பல விடயங்களைப் போல் வீதிச் சிறுவர்களின் கணக்கெடுப்பும் கண்டுகொள்ளக் கடினமானதுடன் தரவுகளும் நம்பத்தகுந்தவையாக இல்லை. இவ்விடயத்தில் தெளிவான ஆய்வுகள் குறைவாகும். பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை நிறுவுவதற்கு மட்டுமன்றி இச்சிறுவர்களின் தேவைகளை, மதிப்பை மற்றும் நிலைமையை சரியாக விளங்கிக் கொள்வதற்கும் வீதிகளில் தொடரும் வாழ்க்கையில் பால் ரீதியான விளைவுகள் அதே போல் அவர்களின் நிலைமைகளின் மாறுபடும் தன்மை போன்றவற்றையும் விளங்கிக் கொள்வதற்கு இன்னும் ஆராய்ச்சிகள் தேவையாக உள்ளன.

இச்சுருக்கத்திற்கான தகவல் சேகரிப்பு தற்போதுள்ள தகவல்களில் இடைவெளிகள் காணப்படுவதும் சில ஆய்வுக்குரிய பிரதேசங்களில் நம்பத்தகுந்த, பிரதிநிதித்துவமான தகவல்களைப் பெற்றுக் கொள்வது கடினமாக உள்ளதையும் உறுதிசெய்கிறது. நிறுவனங்களின் தலையீடுகள் ஆய்வுகளின் சான்றுகளின் அடிப்படையில் திட்டமிடப்படுவதால் உறுதியான சான்றுகளின் தேவை முக்கியமாகவுள்ளது. பல நிறுவனங்கள் தமது தலையீடுகளைத் திட்டமிடுவதற்கு தாமாகவே முதல் நிலைத்

தகவல்களை சேகரிக்கின்றன. ஏன்றாலும் இவ்வாய்வுகளின் முடிவுகள் பரந்த அளவில் ஏனைய நிறுவனங்களுடன் பொதுவாகப் பகிர்ந்து கொள்ளப்படுவதில்லை. முடிவுகளைச் சிறந்த முறையில் பகிர்ந்து கொள்வதானது முயற்சிகள் மீட்டப்படுவதைத் தவிர்ப்பதோடு தலையீடுகள் தேவையான இலக்குகளை சரியாக அடைவதையும் உறுதி செய்யும்.

மேலதிக ஆய்வுகள், புள்ளிவிபரங்கள் அல்லது அறிக்கைகள் போன்றவற்றை வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் வறுமை தகவல் திரட்டிற்கு வழங்குவதன் மூலம் பரந்தளவில் பகிர்ந்து கொள்வதைத் ஊக்குவித்து வறுமை ஆராய்ச்சி நிலையம் இவ்விடயத்தை சுலபமாக்குகிறது. இலங்கையின் வறுமை தொடர்பான தகவல்களின் தளமாக வறுமை தகவல் திரட்டு உள்ளதுடன் பூரணமான தகவல்களைக் கொண்ட ஒரு சேமிப்பகமாக்கும் குறிக்கோளைக் கொண்டுள்ளது. இணையத்தளங்களிலிருந்து பெறக்கூடிய தகவல்கள், அல்லது வாசிகசாலைகளிலுள்ள அச்சிடப்பட்ட பிரதிகள் போன்றவை இத்தகவல் திரட்டுக்கு உட்படுத்தப்படலாம். databse@ecpa.lk எனும் மின்னஞ்சல் முகவரி மூலம் அல்லது 011 2676955-8, 2667967-8 எனும் தொலைபேசி இலக்கங்களினூடு தொடர்பு கொண்டு இப்பகுதியில் ஈடுபட்டுள்ள ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியவை தொடர்பான உங்கள் கருத்துரைகளை தெரிவிக்கலாம். தகவல் திரட்டை பயன்படுத்திக் கொள்ளவும் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களை அணுகுவதற்கும் www.povertydatabase.lk எனும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

## 12. References


AMARAKOON, L., 2002. *Armed Conflict and Sri Lankan Children*. Colombo: Save the Children.

BILSON, A., COX, P., 2005. *Home Truths: Children's Rights in Institutional Care in Sri Lanka* (Advocacy Document). Colombo: Save the Children in Sri Lanka.

CADER, A., REMNANT F., 2008. *The Multiple Dimensions of Child Poverty in Sri Lanka*, Centre for Poverty Analysis.

CENWOR, 1991. *Street Children in Sri Lanka: Report of a Workshop held on 22nd-23rd March 1991*. Colombo: Centre for Women's Research.

CPA, 2003. *A Rapid Assessment on Children in Exploitative Employment in Sri Lanka*. Colombo: Centre for Policy Alternatives.

ILO/IPEC, 2004. Child Labour and Responses: Overview note. Sri Lanka: International Labour Organisation.

COOMARASWAMY, R. and A. SATKUNANATHAN (2006). *Anti-Child Trafficking Legislation in Asia: A Six - Country Review. Regional Project on Combating Child Trafficking for Labour and Sexual Exploitation (TICSA - II).* Bangkok.

DEPARTMENT OF CENSUS AND STATISTICS, 1999. *Child Activity Survey Sri Lanka 1999*. Colombo: DCS and Ministry of Finance and Planning, Sri Lanka.

DEPARTMENT OF CENSUS AND STATISTICS, 2001. *Census of Population and Housing 2001 - Sri Lanka*. Colombo: DCS.

DEPARTMENT OF CENSUS AND STATISTICS, 2002(a). *Sri Lanka Demographic and Health Survey 2000*. Colombo: DCS.

DEPARTMENT OF CENSUS AND STATISTICS, 2002(b). *Demographic and Health Survey 2001: Northern and Eastern Provinces*. Colombo: DCS/UNICEF. [UNPUBLISHED, extracts available at: www.statistics.gov.lk]

DEPARTMENT OF CENSUS AND STATISTICS and UNICEF, 2004. *Survey of Child Health and Welfare in Selected Northern and Eastern Districts in Sri Lanka*. Colombo: DCS & UNICEF.

DE SILVA, S., 2000. *Nutrition: Status, Causes, and Achievements in Sri Lanka. In: Demography of Sri Lanka: Issues and Challenges*. Colombo: University of Colombo.

DE SILVA, W.I., SOMANATHAN, A., ERIYAGAMA, V. 2003. *Adolescent Reproductive Health in Sri Lanka: Status, Policies, Programmes and Issues*. Colombo: Institute of Policy Studies.

DE SILVA, H. D. G. and DE SILVA, D. Undated. *An Assessment of Children in the Streets of Colombo*. Colombo: World Health Organisation.

DIAS, R., 1999. *Children at Risk*. Colombo: Quest.

DIAS, M. 2000. *Problems of children of Migrant Workers. SAARC Regional Workshop on Children of the SAARC Region with special focus on the impact of the SAARC decade on the girl child (1991- 2000).*

DIPHOORN, T., 2006. *It's All About Who Says What. A Discursive Analysis of Child Recruitment in Sri Lanka.* Thesis (M.A.). Utrecht University, The Netherlands.

GAMBURD, M. R. 2005. '*Lentils There, Lentils Here! Sri Lankan Domestic Labour in the Middle East'.* In HUANG, S., YEOH, B. S. A., RAHMAN, N.A. (eds.). Asian Women as Transnational domestic Workers. Marshall Cavendish Academic.

JAYAWEERA, S., SANMUGAM, T. and RATNAPALA, C., 2002. *Child Labour and Non-schooling Children in Selected Low-income Communities in Sri Lanka*. Colombo: Centre for Women's Research.

KANNANGARA, N., DE SILVA, H. and PARNDIGAMAGE, N., 2003. *Child Domestic Labour: A Rapid Assessment. Investigating the Worst Forms of Child Labour*. Geneva: ILO/ IPEC.

MATHIEU, A., 2006. *Reaching The Girls In South Asia*. Kathmandu: UNICEF.

MEDICAL RESEARCH INSTITUTE (MRI) OF THE MINISTRY OF HEALTH & INDIGENOUS MEDICINE. 1998*. Vitamin A Deficiency Status of children in Sri Lanka.* Colombo, Medical Research Institute.

MINISTRY OF EDUCATION, 2007. *School Census 2005.*

MINISTRY OF SOCIAL WELFARE, 2003. National Policy on Disability For Sri Lanka. Colombo: Ministry of Social Welfare.

MOONESINGHE, S., 2002. *The Role of Small arms and Light Weapons in Sri Lanka: Understanding Children of a Gun-culture*. Nethra 5 (3&4), pp.7-25.

NATIONAL INSTITUTE OF EDUCATION and UNICEF, 2003. *Rapid Needs Assessment Survey - Education of Children in Conflict Affected Areas of Sri Lanka.* Colombo: NIE & UNICEF

NCPA/UNICEF (2005). *Report on the National Consultation on Violence Against Children: Sri Lanka. National Consultation on Violence Against Children: Sri Lanka, Colombo,* NCPA/UNICEF. Available at: http://violencestudy.org/IMG/pdf/5_1_.Sri_Lanka_Report_NC_VAC.doc.pdf

RAJENDRAN, S., 2004. *A Study Preventing Child Labour in the Plantation Sector: Badulla District.* Colombo: LJEWU/ILO.

SAVE THE CHILDREN, 2006. *Children's role in household economies: Complementary research to a Livelihoods Assessment, Pottuvil, Ampara District.* Sri Lanka, Colombo

SAVE THE CHILDREN IN SRI LANKA. 2006. *Left Behind, Left Out: The Impact on Children and Families of Mothers Migrating for Work Abroad.* Colombo: Save the Children.

UNICEF, 1990. *A Profile of the Sri Lankan Child in Crisis and Conflict*. Colombo: UNICEF.

UNICEF, 2001. *The Sri Lankan Child.* An Atlas. Colombo: UNICEF

UNICEF, 2005a. *Children and the Tsunami, a Year on.* A Draft UNICEF summary of what worked. New York: UNICEF.

UNICEF, 2005b. *Sri Lanka: After the tsunami, rising birth rate brings challenges*. [Online]. Colombo: UNICEF. Available at: http://www.unicef.org/emerg/disasterinasia/index_30113.html. [Accessed 13 November 2006].

UN Secretary-General, 2006. *Report of the Secretary-General on children and armed conflict in Sri Lanka.* New York: UN

SAVE THE CHILDREN, 1998. *Realising Rights: Children Affected by Armed Conflict in North and East Sri Lanka.* Colombo: Save the Children, (situation report no. 2).

WORDSWORTH, D., McPEAK, M. and FEENY, T., 2005. *Children & Poverty - DEV Framework*. Richmond: Christian Child Fund.

WORLD BANK, 2005. *Treasures of the Education System in Sri Lanka*. Washington DC: World Bank.

மேலோட்டக் கட்டுரைத் தொடர்

வறுமை மேலோட்டங்கள்

No. 1 Overiew of Poverty in Sri Lanka
No. 2 Livelihoods and Poverty in Sri Lanka
No. 3 Poverty Reduction Strategy in Sri Lanka
No. 4 Dimensions of Conflict Outside the North and East of Sri Lanka
No. 5 Poverty and Youth Issues in Sri Lanka
No. 6 Poverty Issues in Southern Sri Lanka
No. 7 Urban Poverty in Sri Lanka
No. 8 Gender Dimensions of Poverty in Sri Lanka
No. 9 The Role of International Finacial Institutions in Sri Lanka
No. 10 Poverty and Trade Issues in Sri Lanka
மே. 11 இலங்கையில் சிறுவர் வறுமை

cepa
centre for poverty analysis
29, Gregory's Road, Colombo 7, Sri Lanka
T. +94 (011) 2676 955-8, 2667 967-8
F. +94 (011) 2676 959
E. info@cepa.lk
www.cepa.lk

CCF-Sri Lanka

Printed by Karunaratne & Sons (Pvt) Ltd,